பக்கங்கள்: 12
விலை:20 ரூபா
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 27 | சனிக்கிழமை 13.10.2018 | கதிர் 341

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு விவகாரம் நன்கு சூடு பிடித்துள்ளது. உச்சக் கட்டம். ஏதோ ஒரு முடிவு கண்டாக வேண்டும் – தீர்வு வந்தாக வேண்டும் – என்ற நிலைமை.

ஒரு புறம் கைதிகள் உண்ணா விரதம். மறுபுறும் தமிழ் அரசியல் கைதிகளை பக்கம் 02

# அரசியல் கைதிகள் விடயத்துக்கு புதனன்று தீர்க்க முடிவு கிட்டும்?

## சம்பந்தன் – சுமந்திரன் அன்று ஜனாதிபதியுடன் பேச்சு அதுவரை உண்ணாவிரதத்தைக் கைவிடக் கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 13

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எதிர்வரும் 17ஆம் திகதி பேச்சு நடத்தித் தீர்க்கமான - உறுதியான - முடிவு ஒன்று எட்டப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் நேற்று உறுதியளித்துள்ளார்.

அதுவரை தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ‘காலைக்கதிரு’க்குத் தெரிவித்தார். பக்கம் 11

## அச்சுவேலியில் எலும்புக்கூடு; நீதிவான் நேரில் விசாரணை



யாழ்ப்பாணம், ஒக். 13

அச்சுவேலிப் பகுதியில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் தொடர்பாக மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை பக்கம் 11

## 46ஆவது பிரதம நீதியரசராக நளின் பெரேரா பதவியேற்பு



கொழும்பு, ஒக். 13

நாட்டின் 46ஆவது பிரதம நீதியரசராக நளின் ஜெயலத் பெரேரா, ஜனாதிபதி மைத்திரிபால பக்கம் 11

## கைதிகளை விடுவித்தால் மட்டுமே பட்ஜெட்டுக்கு ஆதரவு கொடுங்கள்

### இல்லையேல் அதனை எதிர்த்து வாக்களியுங்கள் கூட்டமைப்பிடம் வடக்கு முதல்வர் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 13

பட்ஜெட்டுக்கு ஆதரவு வழங்குவதாக இருந்தால் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற நிபந்தனையைத் தமிழ் அரசியல்வாதிகள் அரசுக்கு முன் வைக்கவேண்டும். அதனை அரசு செய்யத் தவறினால் பட்ஜெட்டை எதிர்த்து வாக்களிக்கவேண்டும்.

–இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

பயங்கர பக்கம் 02

## பட்ஜெட் விடயத்தில் கட்சியின் நிலைப்பாட்டை மீறமாட்டேன்

### ஆயினும் கைதிகள் விடுதலைக்கு அழுத்தம் கொடுப்பேன் என்கிறார் சித்தார்த்தன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 13

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண் பக்கம் 11

## சீனியின் சில்லறை விலை 100 ரூபா

கொழும்பு, ஒக். 13

இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனிக்கான சில்லறை விலை ரூபா 100 என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அலுவல்கள் பக்கம் 11

## வெடுக்குநாறிமலை சிவன் கோவிலுக்கு ஏணிப் படி அமைக்கப் பொலிஸ் தடை!



முல்லைத்தீவு, ஒக். 13

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு ஏணிப் படி அமைக்கும் பணிக்கு நெடுங்கேணிப் பொலிஸார் தடை விதித்துள்ளனர் என ஆலய நிர்வாகத்தின் செயலாளர் து.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

வெடுக்குநாறிமலை உச்சிமலைக்குச் செல்வதற்கு படிகள் இல்லாமல் பெரும் சிரமங் பக்கம் 02

## லலித், குகன் காணாமற்போன வழக்கு: கைபேசி விவரப் பட்டியல் நீதிமன்றில்!

யாழ்ப்பாணம், ஒக். 13

காணாமல் ஆக்கப்பட்டவர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் ஆள் கொணர்வு மனு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது, லலித் வீரராஜின் கைபேசி இணைப்பின் விவரங்கள் டயலொக் நிறுவனத்தின் அதிகாரியால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. பக்கம் 11

## தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஹெரோயினுடன் கைதாகினார்

### தாயார் வழங்கிய தகவலை அடுத்து

யாழ்ப்பாணம், ஒக். 13

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பக்கம் 11

## மேற்குலகத்தின் தலையீட்டினால் கானல்நீரானது இடைக்கால அரசு!

### மஹிந்த தரப்புக்குப் பெரும் ஏமாற்றம்

கொழும்பு, ஒக். 13

மஹிந்த அணியின் ஏற்பாட்டில் இடைக்கால அரசொன்று இலங்கையில் இப்போது அமைவதை அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உட்பட்ட மேற்குலகம் விரும்பவில்லை.

இதனை அந்த நாடுகள் கொழும்பில் உள்ள தமது இராஜதந்திரிகள் ஊடாக ஜனாதிபதி மைத்திரியிடமும் பிரதமர் ரணிலிடமும் கூறியிருக்கின்றன.

இப்போதுள்ள நிலைமையில் இடைக்கால அரசு வருவதை நாங்கள் பக்கம் 11

## மைத்திரி முதலில் இறங்கி வரட்டும் அதன் பின் ரணில் அரசுக்கு அதிரடி!

### 16ஆம் திகதி வரை மஹிந்த அணி காத்திருப்பு

கொழும்பு, ஒக். 13

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வார்த்தைகளை நம்பி இடைக்கால அரசை ஏற்படுத்தும் முயற்சிகளில் இறங்கிவிடக்கூடாது. முதலில் அவர் இறங்கி வரட்டும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சி அரசில் இருந்து பிரித்து பக்கம் 11

## இடைக்கால அரசமைப்பதற்கு சு.கவின் 20 எம்.பிக்கள் எதிர்ப்பு

### ஐ.தே.கவுக்கு ஆதரவளிக்க முடிவு

கொழும்பு, ஒக். 13

இடைக்கால அரசமைக்கும் யோசனைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 20 எம்.பிக்கள் எதிர்ப்பை வெளியிடுவார்கள் என்று பக்கம் 11

# அரியாலையில் காணாமற்போன இளைஞன் படைமுகாமுக்குள் சென்றதைக் கண்டேன்

## யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஒருவர் சாட்சியம்

அரியாலைப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர் இராணுவ முகாமுக்குள் சென்றதை நேரில் கண்டார் எனச் சாட்சி ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுச் சாட்சியமளித்தார். அத்துடன், தமது மகன் இராணுவ முகாமுக்குள் சென்றார் எனவும் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டதாகவும் நேரில் கண்ட பெண் ஒருவர் பலாலி இராணுவ முகாமுக்கு வந்து வாக்குமூலம் வழங்கினார் என்றும் அந்தப் பெண் தற்போது இறந்துவிட்டார் என்றும் இளைஞனின் தாயார் நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

கடந்த வழக்குத் தவணைகளில் மன்றில் முன்னிலையாகாமல் நீதிமன்றின் அதிருப்திக்குக் காரணமாக அமைந்த சட்ட மா அதிபர் திணைக்களம் நேற்று மூத்த அரச சட்டவாதி ஒருவரை அனுப்பி சாட்சிகளிடம் குறுக்கு விசாரணையை முன்னெடுத்தது.

வழக்கு நேற்று விளக்கத்துக்கு வந்தபோது, 5ஆவது பிரதிவாதியான சட்ட மா அதிபர் சார்பில் மூத்த அரச சட்டவாதி நீதிமன்றில் முன்னிலையானார்.

இந்த வழக்கில் மனுதாரரால் முற்படுத்தப்பட்ட கண்கண்ட சாட்சியிடம் அரசசட்டவாதி குறுக்கு விசாரணையை முன்னெடுத்தார்.

யாழ்ப்பாணம் அரியாலை துண்டி இராணுவ முகாமுக்குள் இளைஞர் சென்றமையை அவதானித்தேன். அவரை மறுநாள் காலை காணவில்லை என்று உறவினர்கள் தெரிவித்தனர் என்று குறுக்கு விசாரணையின் போது கண்கண்ட சாட்சி சாட்சியமளித்தார்.

இது தொடர்பில் எங்கேயாவது சத்தியக்கூற்று வழங்கியுள்ளீர்களா? என்று சாட்சியிடம் அரச சட்டவாதி கேள்வி எழுப்பினார். சாட்சி இல்லையென்று பதிலளித்தார்.

தொடர்ந்து இளைஞனின் தாயாரிடமும் தந்தையாரிடமும் சாட்சியம் பெறப்பட்டது.

எனது மகன் துண்டி இராணுவ முகாமுக்குள் செல்வதை பெண் ஒருவர் கண்டார். அவர் அது தொடர்பில் எங்களுடன் பலாலி இராணுவத் தலைமையகத்துக்கு வந்து வாக்குமூலம் வழங்கினார். எனினும் அவர் தற்போது இறந்து விட்டார் என்று இளைஞனின் தாயார் சாட்சியமளித்தார்.

இந்த நிலையில் வழக்கு தொடர் விளக்கத்துக்காக வரும் டிசெம்பர் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

**பின்னணி**

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் 1996ஆம் ஆண்டு இளைஞர் ஒருவர் காணாமல் ஆக்கப்பட்டார். அவரை இராணுவத்தினர் கடத்திச் சென்று தடுப்பு முகாமில் தடுத்துவைத்துள்ளனர் என்று இளைஞனின் பேர்த்தியரான குணவதி நடேசர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு எழுத்தாணை மனுவைத் தாக்கல் செய்தார்.

2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாத முற்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் அரியாலை துண்டி இராணுவ முகாமில் 1996ஆம் ஆண்டு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய ஜெயவர்த்தன முதலாவது பிரதிவாதியாகவும் பூசா தடுப்பு நிலையப் பொறுப்பதிகாரி இரண்டாவது பிரதிவாதியாகவும் இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமாஅதிபர் ஆகியோர் முறையே 3,4 மற்றும் 5ஆவது பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆரம்ப விசாரணைகள் சுமார் 30 மாதங்களாக இடம்பெற்றன. நிறைவில் மனுதாரரின் கோரிக்கைக்கு அமைவாக காணாமல் ஆக்கப்பட்டவர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவானுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளை வழங்கினார்.

இந்தக் கட்டளை 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28ஆம் திகதி வழங்கப்பட்டது. (ஐ)

## மின் தடை

யாழ்ப்பாணம் ஒக். 13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றும் நாளையும் காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை-

**இன்று யாழ். பிரதேசத்தில் -**

வலந்தலை, காரைநகர், சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, வியாவில் கருங்காலி, ஊரி, களபூமி, தோப்புக்காடு, காரைநகர் இறங்கு துறை, காரைநகர் கடற்படைமுகாம், பண்டத்தரிப்பு, விளான், பெரிய விளான், இளவாலை, மாசியன்கூடல், சேந்தாங்குளம் ஆகிய இடங்களிலும் -

**நாளை யாழ். பிரதேசத்தில் -**

பாலாவோடை இணுவில், டச்சு வீதி, உடுவில், சங்குவேலி, மருதனார்மடம் ஒருபகுதி, சுன்னாகம் இலங்கை வங்கி பிரதேசம், அம் பலவாணர் வீதி, யாழ் பல்கலைகழக நுண்கலைப்பீட பிரதேசம், அராலி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர், முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, நிலையக் கட்டடத்தில் சீனிவாசகம் வீதி, யாழ். மாநகர சபை உறுப்பினர் லயன் நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் வி.சிவநேசனும், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் எஸ்.ஜே. சண்முகலிங்கமும் கௌரவ விருந்தினராக பிரதேசத்தின் மூத்த உறுப்பினரான இ.நடேசலிங்கம் தம்பதியினரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் 100 முதியோர்களுக்காக பார்வைக் கண்ணாடிகளும், 25இற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும் என்று நிலையச் செயலாளர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

## அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை பால்மா இறக்குமதி வரி உயர்வு

எதிர்காலத்தில் அரிசி விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படவுள்ளது. வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு, நடத்திய கூட்டத்தில் கட்டுப்பாட்டு விலை பற்றித் தீர்மானம் எட்டப்பட்டது.

இதன் பிரகாரம், ஒரு கிலோ சம்பா அரிசி 108 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாட்டரிசி 88 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும். எந்தத் தினத்திலிருந்து கட்டுப்பாட்டு விலையை அமுலாக்குவது என்பது பற்றி, விரைவில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான வரியையும் 15 ரூபாவால் அதிகரிப்பதென வாழ்க்கைச் செலவுக் குழு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானம் இரு வாரங்களுக்குள் அமுலாக்கப்படும். இதன் மூலம் சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது எனவும், வாழ்க்கைச் செலவுக் குழு அறிவித்துள்ளது.

## இனி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்காவிட்டால் வரவு – செலவுத் திட்டத்தில் அரசுக்கு எதிராகத் தமிழ் எம்.பிக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற அழுத்தம்.

ஏற்கனவே, வரவு – செலவுத் திட்டத்தின் போது நல்லாட்சி அரசை வீழ்த்துவதற்கு கூட்டு எதிரணி கங்கணம் கட்டி நிற்கின்றது. அந்தச் சூழலில், தமிழ்க் கூட்டமைப்பு நல்லாட்சி அரசுக்கு இப்படி ஒரு நிபந்தனை விதிக்க வேண்டும் என்று வெளியாகியிருக்கும் செய்தி கூட்டு எதிரணிக்கு நெஞ்சு நிறைய பால் வார்த்த மாதிரி இருக்கும்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்ப தாயின் அதற்கு அரசு ஓர் அரசியல் தீர்மானத்தை – முடிவை – எடுக்க வேண்டியிருக்கும் என்று கூட்டமைப்பு ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஜனாதிபதியும் பிரதமரும் சேர்ந்து தமிழ் அரசியல் கைதிகளின் நிரந்தர விடுதலை தொடர்பில் ஓர் அரசியல் தீர்மானம் எடுத்து அறிவிக்க வேண்டும் என்றுதான் நேற்று ஜனாதிபதியை நேரில் சந்தித்த சுமந்திரனும், சம்பந்தனும் கேட்டிருந்தனர்.

அது குறித்துப் பேசுவதற்காகவே எதிர்வரும் புதன்கிழமை மாலை சந்திப்புக்கு சம்பந்தனையும் சுமந்திரனையும் ஜனாதிபதி அழைத்துள்ளார்.

ஆனால், அதற்கு இடையில், திங்களன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா பயணமாகின்றார். திருமணம் ஒன்றுக்காகத் தனிப்பட்ட விஜயமாக அவர் இந்தியா செல்கின்றார் என்று கூறப்பட்டது. ஆனால் இந்த விஜயத்தின் போது அவர் இந்தியப் பிரதமர் மோடியையும் சந்திக்கவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

தமிழ்க் கூட்டமைப்பினர், தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாகப் புதனன்று ஜனாதிபதியைச் சந்திக்கும்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிலிருந்து நாடு திரும்பியிருப்பாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

புதனன்று, கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேசிய பின்னர் *"பிரதமர் வெளிநாட்டில். அவர் வந்தவுடன் பேசி முடிவெடுக்கலாம்."* – என்று அரசுத் தரப்புக் கூறி விடயத்தைத் தள்ளிப் போட்டாலும் போட்டுவிடலாம்.

ஆகவே, இது விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டவட்டமான நிலைப்பாட்டைக் கேட்டறிந்து எழுத்தில் பெற்றுக் கொண்டு, அதனையும் ஜனாதிபதியைச் சந்திக்கும்போது தயாராகத் தம்முடன் கூட்டமைப்பினர் கொண்டு சென்றால் அது புத்திசாலித்தனமாக இருக்கும். செய்வார்களா கூட்டமைப்பினர்?

-மின்னல்-

## வெடுக்குநாறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு மத்தியில் அடியவர்கள் அங்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அடியவர்களின் நன்மை கருதி ஆலய நிர்வாகத்தினரால், வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சால் படிகள் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக அவற்றை அமைக்கும் வேலையை ஆரம்பித்தனர்.

தற்போது அவை கட்டி முடியும் தறுவாயில் இருக்கும் நிலையில் ஏணிப்படிகளை அமைக்கும் கடை உரிமையாளரை நெடுங்கேணி பொலிஸார் அழைத்து அவற்றை அமைக்கவேண்டாம் எனவும், அவ்வாறு தொடர்ந்து வேலையை முன்னெடுத்தால் கைது செய்வோம் எனவும் எச்சரித்தனர். அதனால் ஏணிப்படிகளை அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் ஆலய நிர்வாகத்திடமும் நெடுங்கேணிப் பொலிஸார் அந்த வேலையைச் செய்யவேண்டாம் என்றும் அறிவுறுத்தியுள்ளனர்.

பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகளினால் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது என்று வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய நிர்வாக சபைச் செயலாளர் தமிழ்செல்வன் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மிக நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடயத்தில் அரசியல் தீர்மானமொன்றை எடுத்து அரசு விரைவாக விடுவிக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் குறித்து ஆராயும் பொது அமைப்புக்களுடனான கூட்டம் ஒன்று நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

29 நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தி வரும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகவும், அவர்களின் உடல்நிலை தொடர்பாகவும் பேசியுள்ளோம். இதனடிப்படையில் அவர்களை விடுதலை செய்வதற்கும், அவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்திருக்கிறோம்.

சில தீர்மானங்களை எடுத்துள்ளோம். சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களுக்கு ஆணை வழங்கியவர்கள்– உதாரணமாகக் கருணா போன்றவர்கள் – வெளியே சுகபோகம் அனுபவித்துக் கொண்டு இருக்கும் நிலையில் ஆணையை ஏற்று நடவடிக்கையில் இறங்கியவர்களுக்கு மட்டும் தண்டனை வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாகும்.

இலங்கை அரசின் 2019ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நவம்பர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கு ஆதரவு தெரிவிக்கவேண்டுமாக இருந்தால் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைசெய்யப்படவேண்டும். அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் இத்தகைய நிபந்தனை விதிக்கவேண்டும்.

இதனை பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அரசுக்கும், அரசில் உள்ள முக்கிய அரசியல்வாதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதிகள் கூறவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான பிரச்சினையைச் சிவில் சமூக அமைப்புக்கள் கையில் எடுத்திருக்கும் நிலையில், அதனை ஆக்கபூர்வமாகக் கொண்டு சென்று விடுதலைக்கான முயற்சிகளை எடுக்கவேண்டியுள்ளதால் தொடர்ச்சியான உணவுதவிர்ப்புப் போராட்டத்தை அரசியல் கைதிகள் நிறைவுக்குக் கொண்டுவரவேண்டும் என கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக அருட்தந்தை எம்.சக்திவேல் தலைமையில் 5 பேர் கொண்ட குழு அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அரசியல் கைதிகளிடம் கோரிக்கை விடுப்பதெனவும் முடிவாகியது.

சட்டத்துக்கு முரணான பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத்தான் நீக்குவதாக அரசே வெளிநாடுகளிடம் தெரிவித்துள்ள நிலையில் அதனை நீக்கி அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களையும் விடுதலை செய்யவேண்டும்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்குத் தொடர்ந்தும் அரசுக்கு அழுத்தங்களையும் நெருக்குதல்களையும் கொடுக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது–என்றார். (ஐ-07)

# கைதிகளுக்காக மாணவர்கள் மேற்கொள்ளும் நடைபவனிக்கு வவுனியாவில் அமோக வரவேற்பு!






வவுனியா, ஒக்.13

யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்திலுள்ள அரசியல் கைதிகளின்விடுதலையைவலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால்முன்னெடுக்கப்படும்நடைபவனி நேற்று முன்தினம் இரவு 3 ஆவது நாளில் ஓமந்தையை வந்தடைந்தது.

4 ஆவது நாளான நேற்று காலை ஓமந்தையிலிருந்து வவுனியா நகரை நோக்கி நகர்ந்தது. இதன்போது தாண்டிக்குளத்தில் வைத்து அமோக வரவேற்பு அளிக்கப்பட்டு வவுனியா நகருக்குநடைபவனி அழைத்துச் செல்லப்பட்டு பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக ஒன்றிணைந்தபாடசாலைமாணவர்கள் நடைபவனியினருக்கு அமோக வரவேற்பு அளித்துள்ளனர்.

அரசியல் கைதிகளின் விடுதலையை முன்நிறுத்தியும் அவர்களின் விடுதலைக்கு ஒரு தீர்க்கமான தீர்வைப் பெற்றுத்தருமாறும் கோரியே இந்த நடைபவனி நடைபெறுகிறது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராட்டம் 9 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்பட்டு அதன் பின் நடைபவனியாக கிளிநொச்சி, மாங்குளம், வவுனியா ஓமந்தையை வந்தடைந்தது.

நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து அனுராதபுரம் சிறைச்சாலையை நோக்கி செல்ல ஆரம்பித்துள்ளது.

வடமாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ம.தியாகராசா, முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்வினோநோகராதலிங்கம், முன்னாள் மாகாணசபைஉறுப்பினர்செந்தில்நாதன் மயூரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், நகரசபை மற்றும்பிரதேசசபைஉறுப்பினர்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம், வவுனியா வர்த்தகர் சங்கம், பொது அமைப்புக்கள், வவுனியா வர்த்தகர் நலன் புரிச்சங்கம், உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கம், வவுனியா மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டு அனுராதபுரம் சிறையிலுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கோசங்களை எழுப்பியவாறு ஆரம்பமான நடைபவனிக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். (க-100)

## மரணமடைந்த விரிவுரையாளர் போதநாயகியின் வீட்டிற்கு சென்று ஆறுதல் கூறிய அமைச்சர் அனந்தி!



வவுனியா, ஒக்.13

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் விரிவுரையாளராக கடமையாற்றிய நிலையில் அண்மையில் திருகோணமலை சங்கமித்த கடற்கரையில்சடலமாகமீட்கப்பட்ட போதநாயகியின் வீட்டிற்கு வடமாகாணமகளிர்விவகாரஅமைச்சர் அனந்தி சசிதரன் சென்று ஆறுதல் தெரிவித்திருந்தார்.

இதன்போது போதநாயகியின் தாய் மற்றும் தந்தையுடன் கலந்துரையாடிய அவர் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் போதநாயகியின் திருமண வாழ்வின் பின்னரான நிலைமைகள் தொடர்பிலும் தாயாரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை செவிமடுத்திருந்தார்.

இந்த நிலையில் விரிவுரையாளரான போதநாயகியின் மரணத்தில் அவரது கணவரான சு.செந்தூரன் மீதே தமக்கு சந்தேகம் இருக்கிறது என்றும் எதிர்வரும் 22 ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றத்தில் இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு உள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

இதேநேரம் தாயாரால் தனது மகளின் இறப்பில் மகளின் கணவரின் மேல் சந்தேகம் இருப்பதாக தெரிவித்ததுடன், சட்டமா அதிபரின் மூலமாக விசாரணையை தீவிரப்படுத்துமாறு கோரி தனது சார்பில் அமைச்சர் அனந்தி சசிதரனிடம் சட்டமா அதிபரிடம் கையளிப்பதற்காக கோரிக்கை கடிதம் ஒன்றையும் கையளித்திருந்தார். (க-100)

## பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்கான நிவாரணங்கள் தொடர்பில் கூடுதல் கவனம்

எரிபொருளின் விலை அதிகரித்துச் சென்றுள்ள நிலையில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்காக நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சருடன் இது தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளோம் என்றும் அவர் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, திருகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கியை அரசு விற்பனை செய்ய முற்படுகிறது எனும் தலைப்பில் ஊடகங்களில் வெளியான செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கிகள் எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யப்பட மாட்டா என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மஹிந்த ஆட்சி தொடர்ந்திருந்தால் நாங்கள் காணாமல் போயிருப்போம்!

ஹிருணிகா பிரேமசந்திர கூறுகிறார்



கொழும்பு, ஒக்.13

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தொடர்ந்திருந்தால் முறையற்ற விதத்தில் துமிந்த சில்வா இன்றும் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்டிருந்திருப்பார்.

நானும் எனது குடும்ப உறுப்பினர்களும் காணாமலாக்கப்பட்டிருப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

நல்லாட்சி அரசில் நீதித்துறை எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இன்றி சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது என்பது மீண்டும் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட தீர்ப்பின் ஊடாக நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

ஐக்கியதேசியக்கட்சியின்தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இந்திய நாசகாரி கொழும்பில்!



கொழும்பு, ஒக்.13

இந்தியக் கடற்படையின் வழிகாட்டல் ஏவுகணை நாசகாரிக் கப்பலான ஐஎன்எஸ் ராஜ்புத் கொழும்புத் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளது.

இரண்டுநாள் நல்லெண்ணப் பயணமாக வந்துள்ள இந்தியக் கடற்படையின் நாசகாரி கப்பலுக்கு, இலங்கை கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

ஐ.என்.எஸ். ராஜ்புத் போர்க்கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் ராஜேஸ் நாயர் உள்ளிட்ட இந்திய அதிகாரிகள், இலங்கை கடற்படையின் மேற்கு பிராந்திய தளபதி றியர் அட்மிரல் நிசாந்த உலுகெதென்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதில் இந்தியதூதரகபாதுகாப்பு ஆலோசகர் கப்டன் அசோக் ராவும் கலந்து கொண்டார்.

146 மீற்றர் நீளம் கொண்ட ஐ.என்.எஸ். ராஜ்புத் கப்பலில் 35 அதிகாரிகள் உள்ளிட்ட 350 கடற்படையினர் பணியாற்றுகின்றனர்.

அதிநவீன பிரமோஸ், தனுஷ் உள்ளிட்ட ஏவுகணைகளைத் தாங்கிய இந்தக் கப்பலில் உலங்குவானூர்தி தரித்திருக்கும் வசதிகளும் உள்ளன.

இந்தக் கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றது.

## கல்வித் திட்டம் நவீனமயப்படுத்தப்படும் – கல்வி அமைச்சர்

கொழும்பு, ஒக்.13

இலங்கையின் கல்வித்திட்டம் நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் பாடத்திட்டத்தை மாற்றுதல் மற்றும் பொருள் உள்ளடக்கங்களில் திருத்தம் மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கைதிகள் விடயத்திற்கு முடிவு?

வெஞ்சிறையில் தாங்கள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமையை ஆட்சேபித்து உண்ணாநோன்பு இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவை எட்டுவதற்கான சூழல் பொருந்தி வருவதாகத் தோன்றுகின்றது. தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் நேற்று இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற கொடூரமான – முறையற்ற – சட்டத்தின் கீழ் நீண்ட பல வருடங்களாக வாடும் இக்கைதிகளின் விவகாரத்தில் சட்டம் மூலமான தீர்வு சாத்தியமற்றது. இது விடயத்தில் ஓர் அரசியல் தீர்மானமே – தீர்வே –அவசரமானதும் அவசியமானதுமாகும்.

அதையே சம்பந்தனும் சுமந்திரனும் நேற்று நாட்டின் தலைவருக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். இனியும் துரித விசாரணை, வழக்குகளுக்கு விரைவில் முடிவு என்று 'பம்மாத்து' காட்டுவதில் அர்த்தமில்லை என்பதைத் தமக்குரிய அரசியல் மொழியில் இருவரும் ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

பத்து வருடங்களுக்கும் மேல் – ஓர் ஆயுள் தண்டனைக் காலத்துக்கும் அதிகம் – சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை இனிமேலும் வழக்கு, விசாரணை என்று தடுப்புக் காவலில் வைத்து இழுத்தடிப்பது பெரும் பாவம் என்று சுட்டிக்காட்டியுள்ள கூட்டமைப்புத் தலைமை, இந்த விடயத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் ஒன்றிணைந்து ஒரு அரசியல் தீர்மானம் எடுப்பதே இன்றைய அவசரத் தேவை என வலியுறுத்தியுள்ளனர்.

யுத்தம் முடிவுற்று பத்து வருடங்களாகிவிட்டன. விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் என்ற பெயரில் கைது செய்யப்பட்ட பன்னீராயிரம் பேர் புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்டும் பல ஆண்டுகளாகிவிட்டன. இதற்குப் பின்னரும் எச்ச சொச்சமாக சுமார் 109 பேரை மட்டும் நீண்ட காலம் சிறையில் வைத்து அவர்கள் வாழ்வைப் பிய்த்துப் பிடுங்குவது பெரும் அநியாயமின்றி வேறில்லை.

தம்மைக் கொலை செய்யும் சதி முயற்சியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியையே, தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மன்னிப்பு அளித்து, விடுதலை செய்வித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பின்னர் அந்தப் போராளியைத் தனது இல்லத்துக்கு அழைத்து, தேநீர் விருந்தளித்து, உபசரித்து அவருடன் அளவளாவினார்.

அவ்வளவு மன்னிக்கும் மனப்பான்மையும் தாராள குணமும் கொண்ட அரசியல்வாதி என உலகுக்குத் தன்னைக் காட்ட முடியுமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எஞ்சியுள்ள இந்த 109 கைதிகளையும் விடுவிக்கும் அரசியல் தீர்மானம் ஒன்றை எடுப்பது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல.

எனினும், ஜனாதிபதியும் பிரதமரும் இது விடயத்தில் ஒற்றுமைப்பட்டு ஒரு தீர்மானம் எடுப்பார்களா, அரசியல் முடிவு ஒன்றுக்கு வருவார்களா என்பதுதான் இப்போது வினா.

அத்தகைய முடிவுக்கு எடுத்த எடுப்பில் அவர்கள் வர முடியாதுதான். பாதுகாப்புத் தரப்பினர், நீதியை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், சட்ட மாஅதிபர் போன்றோருடனும் தமது அரசியல் ஆலோசகர்களுடனும் கலந்தாய்வு செய்த பின்னரே ஜனாதிபதி இது குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர முடியும்.

அந்த வகையில், இந்த விடயம் குறித்துப் பேசி இறுதி முடிவுக்கு வருவதற்கான கலந்துரையாடலுக்கு – சந்திப்புக்கு – ஐந்து நாள்கள் தள்ளிப்போட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமைக்கு ஜனாதிபதி நேரம் ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றமையைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆனாலும், நீண்ட காலமாக – பத்து வருடங்களுக்கு மேல் – தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற தமது வாதத்தைக் கூட்டமைப்பின் தலைவரும் பேச்சாளரும் நேற்று ஜனாதிபதி முன் எடுத்துரைத்த போது *"ஆமாம். அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்"* – என்று ஜனாதிபதியும் அவர்களோடு சேர்ந்து ஒத்து ஊதும் வகையில் கருத்து வெளியிட்டார் எனத் தெரிகிறது.

*"ஆமாம். அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்"* – என்ற தமது பதிலின் விளக்கத்தை – வியாக்கியானத்தை – ஜனாதிபதி அங்கு கூறவில்லை. ஆனால், அதுதான் சில சந்தேகங்களை நமக்குத் தந்து நிற்கிறது.

அனைவரும் என்று அவர் கூறியமை சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை மட்டும் குறிக்கின்றதா அல்லது யுத்தக் குற்றங்கள் இழைத்தார்கள் என்று குற்றம் சுமத்தப்படும் – இன்னும் இன்ன, இன்னார்தான் என அடையாளப்படுத்தி, பெயர் குறிப்பிடப்படாத – படைத்தரப்பினரையும் சேர்த்துத்தானா என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு உடன் விடுதலை மிக அவசரமானது, மிக அவசியமானது. இனியும் இழுத்தடிக்கப்பட முடியாத விடயம். ஆனாலும், அதனுடன் படைத்தரப்புக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டு விடயத்தைக் கலக்காமல் –அதனை ஒரு நிபந்தனையாக்க இணங்காமல் – விவகாரத்தைக் கையாள்வது கூட்டமைப்புத் தலைவர்களின் பொறுப்பு.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் நடைபவனி வெற்றியளிக்கவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு நடைபவனியை ஆரம்பித்திருக்கின்றார்கள். அது, வெற்றியளிக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் மகாத்மா காந்தியின் 150ஆவது ஆண்டு ஞாபகார்த்தம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மகாத்மா காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாறு இன்றும் கூட உலகில் வியந்து போற்றத்தக்கதொரு வரலாறாக இருக்கின்றது. அவரைப் பற்றி கூறி முடிப்பதற்கு எனக்குத் தரப்பட்டுள்ள நேரம் போதாது என்பதால், இந்தியாவுக்கு ஓர் அடையாளத்தைக் கொடுத்த மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் மிக சில விடயங்கள் தொடர்பில் மாத்திரம் கூறலாம் என எண்ணுகின்றேன். அதிலிருந்து இந்த நாடு சில படிப்பினைகளைப் பெற வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

அவரது தண்டி யாத்திரை. இது 1930ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி மகாத்மாவின் சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து 240 மைல்கள் தொலைவில் இருந்த தண்டி வரை 23 நாள்கள் நீடித்த நடைபயணமாகும்.

இந்தியாவை ஆட்சி செய்திருந்த ஆங்கிலேயர்கள் உப்புக்கு விதித்த வரியை எதிர்த்தே அன்று இந்த நடைபயணம் மகாத்மாவினால் ஆரம்பிக்கப்பட்டு, வெற்றி ஈட்டப்பட்டது.

உப்பு, அனைத்து மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்பது மகாத்மாவின் எண்ணமாக இருந்தது.

இலங்கை நாட்டில் சூழவும் கடல் இருந்தும் உப்பையும் நீங்கள் இறக்குமதி செய்து, அத்தனைக்கும் வரி விதித்துக் கொண்டிருக்கின்றீர்கள். மக்கள் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். மகாத்மாவின் தண்டி நடைபயணம் போல், ஒரு கண்டி நடைபயணத்தையாவது அவர்கள் சுயமாக ஆரம்பிக்க இதுவரை ஆயத்தமாக இல்லை. இனி எப்படியோ கூறமுடியாது. என்றாலும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு நடைபயணத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள். அது, வெற்றியளிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

வடக்கு–கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை அங்கு காணப்படக்கூடிய உப்பளங்களை மீள உரிய முறையில் அபிவிருத்தி செய்தாலே எமது நாட்டின் நுகர்வுத் தேவைக்குப் போதுமான, தரமான உப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். அதே நேரம் ஏற்றுமதிக்கெனவும் பயன்படுத்த முடியும்.

யுத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் மன்னார், ஆணையிறவு, குறிஞ்சாந்தீவு போன்ற உப்பளங்கள் பாரிய இலாபத்துடன், பல்லாயிரக்கணக்கானோருக்கான வேலைவாய்ப்புகளுடன் செயற்பட்டு வந்திருந்தன. எனவே, இவ்விடயம் தொடர்பில் இந்த அரசு அவதானங்களைச் செலுத்த வேண்டும்–என்றார். (ஐ)

# திருமலை எரிபொருள் தாங்கிகளை ஒருபோதுமே விற்க விடமாட்டேன்!

## கூறுகிறார் அர்ஜுன ரணதுங்க

கொழும்பு, ஒக். 13

திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை விற்பதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். நாட்டை காட்டிக்கொடுக்கவோ, வளத்தை விற்பதோ எனது கொள்கையாகாது. எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதே எனது நோக்கமாகும் என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை விற்பனை செய்வது தொடர்பாக வெளியிட்ட கருத்துக்குப் பதில் கூறும் வகையில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தமது கருத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் தவறு செய்திருந்தால் அதனைத் திருத்தவே நாங்கள் முயற்சி செய்கிறோம். நாங்கள் கடந்த ஆண்டு சிறந்த முறையில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை நிர்வகித்துள்ளோம். நாங்கள் பதவிக்கு வந்த பிறகு கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்று வந்த முறைகேடுகளை நிறுத்தியுள்ளோம். குறிப்பாக தரமற்ற எரிபொருள் கலப்பு மற்றும் டீசலில் மண்ணெண்ணெய் கலப்பதைத் தடுத்து நிறுத்தியுள்ளோம். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை விற்பது தொடர்பாக குற்றம்சாட்டியுள்ளார்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன? 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கமையவே இந்திய நிறுவனத்துக்கு திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் அதில் எவ்வித அபிவிருத்தியையும் செய்யவில்லை. எனினும் இந்திய நிறுவனம் பல இலாபங்களை இந்த எரிபொருள் தாங்கிகள் மூலம் பெற்றுக் கொண்டது. 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் ஏதாவது பிழையிருந்திருந்தால் அந்த நேரமே ஜே.வி.பி. முன்னாள் ஜனாதிபதிக்குச் சொல்லி ஒப்பந்தத்தை மாற்றியிருக்கலாமே.

நான் எடுத்துள்ள முயற்சியானது எமது நாட்டுக்கு பயனுள்ள வகையிலேயேயாகும். இந்திய எரிபொருள் நிறுவனம் 15 எரிபொருள் தாங்கிகளையே பயன்படுத்தி வருகின்றது. அமைச்சரவை அனுமதியளித்துள்ள 16 எரிபொருள் தாங்கிகளை பெற்றோலிய கூட்டுத்தாபனம், பொது மக்கள் நிறுவனத்துடன் இணைந்து பயன்படுத்தவுள்ளது. நான் இதனை புறக்கணித்திருக்கலாம் இன்னும் 2 வருடங்கள் உள்ள நிலையில், ஆனால் அப்படி செய்யவில்லை. நாட்டின் நலன் கருதியே இதைச் செய்யவுள்ளோம். நாங்கள் இந்த எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

போர்க் காலத்திலேயே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதை இந்தியாவுக்கு வழங்கப்படாமல் இருந்திருந்தால் எரிபொருள் தாங்கிகள் விடுதலை புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி இருக்கும். இதை நல்ல கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் – என்றார்.

# ஓட்டோக் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 13

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக, ஓட்டோ பயணக் கட்டணம் 10 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோச் சாரதிகள் சங்கத்தின் கலந்துரையாடலின் பின்னரே, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

புதிய கட்டணச் சீர்திருத்தத்துக்கு அமைவாக, முதலாவது கிலோ மீற்றருக்காகத் தற்போது அறவிடப்படும் 60 ரூபா என்ற கட்டணத்தில் எந்த மாற்றமும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, இரண்டாவது கிலோ மீற்றருக்காக அறவிடப்படும் 40 ரூபா என்ற கட்டணம் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, 50 ரூபாவாக அறவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

14.10.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: கேட்டை 4.15 வரை
திதி : பஞ்சமி மு.ப. 8.53 வரை
சுபநேரம் : 9.02 – 10.32 வரை
இராகுகாலம் : 4.32 – 6.02 வரை

# எனது அமைச்சிலுள்ள நிதிகளை வட, கிழக்குக்கு பகிர்ந்தளிப்பேன்!

## அமைச்சர் மனோ தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஒக்.13

எனது அமைச்சிலுள்ள நிதிகளை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு பகிர்ந்தளிப்பேன் என தேசிய நல்லிணக்க சகவாழ்வு ஒருமைப்பாடு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

அரசியல் தீர்வும் அபிவிருத்தியும் சமாந்தரமாக மேற்கொண்டால் மாத்திரமே தமிழ் மக்களின் எதிர்கால இருப்பு உறுதி செய்யப்படும். அவ்வாறு இல்லாவிடின் அரசை உருவாக்கிவிட்டு வெளியிலிருந்து வேடிக்கை பார்ப்பவர்களாகவே இருப்போம்.

இந்த நல்லாட்சி அரசை நாங்கள் உருவாக்கினோம். அவர்களிடமிருந்து வளங்களைப் பெறுவதற்கு எமக்கு உரிமை உள்ளது அவர்களிடம் பிச்சை கேட்டு பெறவேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

அதற்காக தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரம் கிடைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி இணங்கமாட்டார்!

## – அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நம்பிக்கை



கொழும்பு, ஒக்.13

இடைக்கால அரசை அமைக்கும் முயற்சிகளிற்கு ஜனாதிபதி மைத்திரி இணங்கமாட்டார் என அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிறிசேன புத்திசாலித்தனமாக நடந்துகொள்வார் என நம்பிக்கை வெளியிட்டுள்ள ஹரீன் பெர்னாண்டோ, சிறிசேன அவசரப் பட்டு முடிவெடுக்கமாட்டார் எனவும் தெரிவித்துள்ளார்

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதி மைத்திரி அவ்வாறு செயற்படமாட்டார் என்பது குறித்து ஐக்கிய தேசியத் கட்சிக்கு நம்பிக்கையுள்ளது .

தோற்கடிக்கப்பட்ட அரசியல்வாதிகளை அமைச்சர்களாக நியமித்தமையே பல பிரச்சினைகளிற்கு காரணம்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவந்து தோல்வியடைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தற்போது வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், அவர்களின் இந்த முயற்சியும் தோல்வியடையும் எனவும் ஹரீன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

# புதையல் தோண்டிய 12 பேர் மட்டு. திராய்மடுவில் கைது!

மட்டக்களப்பு, ஒக்.13

மட்டக்களப்பு – திராய்மடு சவுக்கடிப் பிரதேசத்தில் புதையல் தோண்டலில் ஈடுபட்ட 12 பேரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளோம் என மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து இந்த பிரதேசத்தில் சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு சுற்றிவளைத்து சோதனை மேற்கொண்டபோது புதையல் தோண்டலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 12 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

மட்டக்களப்பு , நீர்கொழும்பு, சிலாபம், அலாவத்தை, அக்குறனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 6 தமிழர்களும் 6 இஸ்லாமியர்களுமாக 12 பேரை கைது செய்ததுடன், ஸ்கானர் மற்றும் புதையல் தோண்டலுக்குப் பயன்படுத்திய பொருள்களையும் மீட்டுள்ளனர் .

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

# இடைக்கால அரசை அமைக்கும் முயற்சிகள் தொடர்கின்றன என்கிறார் எஸ்.பி. திசாநாயக்க



கொழும்பு, ஒக்.13

இடைக்கால அரசை அமைப்பது குறித்து மீண்டும் ஜனாதிபதி சிறிசேனவுடன் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளோம் என முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இடைக்கால அரசை அமைப்பது குறித்து சிறிசேனவுடன் பேச்சுகளை மேற்கொள்ளும் பொறுப்பு அரசிலிருந்து பிரிந்து சென்ற 16 நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் மாலை முன்னாள் ஜனாதிபதியின் வீட்டில் பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பொன்று இடம்பெற்றது.

மாகாணசபைகள் தேர்தல், நாட்டின் பாதுகாப்பற்ற நிலை, தற்போதைய அரசை கவிழ்ப்பது உட்பட பல விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் ஆராயப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு குறித்து ஜனாதிபதி சிறிசேனவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னர் புதைக்குழியின் அகழ்வு சீரற்ற காலநிலையால் நிறுத்தம்!



மன்னார், ஒக்.13

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள ‘லங்கா சதொச’ விற்பனை நிலைய வளாகத்தில் மனித எலும்புகள் அகழ்வு பணி நேற்றுமுன்தினம் 85 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று அகழ்வு பணிகள் மற்றும் அப்புறப்படுத்தும் பணிகள் இடம் பெறாத நிலையில் இந்த வளாகத்தை முழுமையாக சுற்றி மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் நீதிவான் மேற்பார்வையிலும் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையிலும் மன்னார் மனித புதைகுழி தொடர்பான நிலையை அறிவதற்கான அகழ்வு மற்றும் ஆய்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக அதிகரித்த காற்று மற்றும் வானிலை மற்றும் அதிகரித்த மழை காரணமாக அகழ்வு பணிகள் நடைபெறும் வளாகம் முழுவதும் நீரினல் சூழ்ந்து காணப்பட்டதை தொடர்ந்து அகழ்வு பணிகளை மேற்கொள்வதில் பெறும் சிரமம் ஏற்பட்டது.

அது மட்டும் இன்றி அகழ்வு பணியின் போது அப்புறப்படுத்தாமல் புதைகுழியில் காணப்படுகின்ற மேலதிக மனித எலும்புக்கூடுகள் சிதைவடைவதற்கான வாய்ப்பும் காணப்பட்டதை தொடர்ந்து குறித்த வளாகத்தினை முழுவதுமாக மூடுவதற்கான நிதி பங்களிப்பு மற்றும் உதவியானது காணாமல் ஆக்கப்பட்டோருக்காக செயற்படும் அலுவலகத்தில் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இந்தக் கோரிக்கைக்கு அமைவாக மனித புதைகுழி வளாகத்தை முழுவதுமாக சுற்றி மூடுவதற்கான உபகரணங்கள் மற்றும் பொருள்கள் வழங்கப்பட்டமை தொடர்ந்து நேற்று வளாகம் முழுவதையும் அதீத காற்று மற்றும் மழையில் இருந்து பாதுகாப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வல்லப்பட்டைகளுடன் இலங்கை பிரஜை கைது!





கொழும்பு, ஒக்.13

சட்டவிரோதமான முறையில் ஒரு தொகை வல்லப்பட்டையை டுபாய் நாட்டுக்கு கடத்திச்செல்ல முற்பட்ட இலங்கை பிரஜை ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேக நபர் நாத்தாண்டிய பிரதேசத்தை சேர்ந்த 43 வயதான வியாபாரி என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 4 மணிக்கு பஹ்ரெய்ன் ஊடாக டுபாய்க்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்ற போது சந்தேகநபரின் பயணபையில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு தொகை வல்லப்பட்டைகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நபரின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரை சோதனையிட்டபோது 23 கிலோ கிராம் வல்லப்பட் டைகளை கைப்பற்றியுள்ளதுடன் அவற்றின் பெறுமதி சுமார் 23 லட்சம் ரூபாவென சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அமெரிக்காவின் வர்த்தக போரை ஒருங்கிணைந்து எதிர்கொள்ள வேண்டும்: இந்தியாவுக்கு சீனா அழைப்பு

பீஜிங், ஒக்.13

அமெரிக்காவின் வர்த்தக போரை எதிர்கொள்ள இந்தியாவுடன் இணைந்து செயல்பட விரும்புகிறோம் என சீனா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா – சீனா இடையேயான வர்த்தகப்போர் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் மேற்கொண்டுள்ள பொருளாதார நடவடிக்கைகளால் சீனாவின் வர்த்தகம் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடிகளை ஒன்றாக எதிர்கொள்வோம் என இந்தியாவுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து சீன தூதரகத்தின் செய்தி தொடர்பாளர் ஜி ரோங் அளித்துள்ள பேட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–



தற்போது காணப்படும் வர்த்தக நெருக்கடிகளை எதிர்கொள்ள சீனாவும், இந்தியாவும் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம். இரு நாடுகளும் பெரும் பொருளாதார சக்தியை கொண்டிருக்கின்றன. அமெரிக்கா மேற்கொள்ளும் எந்தவொரு வர்த்தக நடவடிக்கையும் சீனாவை மட்டும் பாதிக்காது.

இந்தியாவுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும். பொருளாதார சக்தி மிக்க நாடாக இந்தியா மாறுவதை அமெரிக்காவின் நடவடிக்கைகள் தடுக்கும்.

சீனா மற்றும் இந்தியா போன்ற வளரும் நாடுகளின் பொருளாதார விடயங்களில் அமெரிக்கா அதிகளவு தலையிடுகிறது. சர்வதேச அளவில் பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ள இரு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் இருநாட்டு வளர்ச்சியும் சிறப்பாக இருக்கும்.

சர்வதேச அளவில் இப்போது நிலவி வரும் சூழலை எதிர்கொள்ள இந்தியாவுடன் இணைந்து செயல்பட சீனா விரும்புகிறது. அப்போதுதான் அமெரிக்கா போன்ற நாடுகளின் வர்த்தக போரை எதிர்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நடுவானில் கோளாறான ரஷ்யாவின் ரொக்கெட்!



ரஷ்யாவின் சோயுஸ் ரொக்கெட் நடுவானில் சென்று கொண்டிருக்கும்போது நடுவானில் கோளாறு ஏற்பட்டதைத் தொடர்ந்து அதில் பயணம் செய்த விண்வெளி வீரர்கள் அவசரமாகத் தரையிறங்கினர்.

கசகஸ்தான் நாட்டிலிருந்து ரஷ்யாவின் சோயுஸ் ரொக்கெட் விண்வெளி வீரர்களுடன் நேற்று முன்தினம் புறப்பட்டபோது நடுவானில் திடீரென கோளாறு ஏற்பட்டது.

இந்த நிலையில், அந்த ரொக்கெட்டில் பயணம் செய்த விண்வெளி வீரர்களான நிக் மற்றும் ரோஸ்கோஸ்மோஸ் ஆகியோர் சுமார் 2.30 மணியளவில் தரையிறங்கினர்.

அதனைத் தொடர்ந்து ரொக்கெட்டை ஏவும் முயற்சி தோல்வியில் முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளிவீரர்கள் ஏவுகணை ஏவப்பட்ட இடத்திலிருந்து 450 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஜெசிஸ்கான் என்ற பகுதியில் மீட்கப்பட்டனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், மீட்கப்பட்ட விண்வெளி வீரர்கள் நலமாக இருக்கின்றனர் என்றும் ரொக்கெட்டின் பூஸ்டரில் கோளாறு ஏற்பட்டதாகவும், ரொக்கெட்டிலுள்ள பேலிஸ்டிக் வாகனம் மூலம் விண்வெளி வீரர்கள் பூமிக்குத்திரும்பியதாகவும் நாசா மற்றும் ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சித் துறை தெரிவித்துள்ளது. இதனை ரஷ்ய ஜனாதிபதி புடினின் செய்தித் தொடர்பாளர் டிமிரிபெஸ்கோவ் உறுதிப்படுத்தி உள்ளார்.

# 'மீ டூ' மூலம் பாலியல் புகார்கள் கூறுபவர்கள் வலுவான ஆதாரத்தை வைத்திருக்க வேண்டும்!

## மெலானியா ட்ரம்ப் தெரிவிப்பு

நியூயோர்க், ஒக்.13

'மீ டூ' மூலம் பாலியல் புகார் கூறுபவர்கள் வலுவான ஆதாரத்தை வைத்திருக்க வேண்டும் என்று மெலானியா ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பணியிடங்களில் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டதை வெளியே சொல்லாமல் புழுங்கிக்கொண்டிருந்த பெண்கள், சமூக வலைதளங்களில் 'மீ டூ' இயக்கத்தின் மூலம் தற்போது தங்களுக்கு ஏற்பட்ட நிலையைக் கூறிவருகின்றனர். திரையுலக பிரபலங்கள் தொடங்கி, பல்வேறு துறையிலும் நடந்த பாலியல் ரீதியான பாதிப்புகளை பெண்கள் வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், 'மீ டூ' இயக்கம் குறித்து மெலானியா கருத்து தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள



மெலானியா, கடந்த வாரம் கென்யாவில் ஏபிசி செய்தி நிறுவனத்துக்குப் பேட்டியளித்தார்.

அப்போது பேசிய மெலானியா மேலும் தெரிவித்தவை வருமாறு–

'மீ டூ' இயக்கப் பெண்களை நான் ஆதரிக்கிறேன். அவர்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டும். அவர்களை நாம் அரவணைக்க வேண்டும்.

அதே நேரத்தில் புகார் கூறும் பெண்கள், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வலுவான ஆதாரத்தை வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் வெறுமனே, 'நான் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டேன்', 'அவர் அதைச் செய்துவிட்டார்' என்று கூறக்கூடாது. ஏனெனில், ஊடகங்கள் சில நேரங்களில் சில சம்பவங்களை அவர்களுக்கு ஏற்றவாறு சித்திரித்துவிடலாம். அது சரியல்ல" என்று அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியும், மெலானியாவின் கணவருமான டொனால்ட் ட்ரம்ப், ஏராளமான பாலியல் புகார்களை எதிர்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவை புரட்டிப் போட்ட பயங்கர சூறாவளி: 13 பேர் பலி



வொஷிங்டன், ஒக்.13

அமெரிக்காவை புரட்டி போட்ட மைக்கேல் புயலில் சிக்கி இது வரை 13 பேர் இறந்துள்ளனர் என்றும், புயலால் 3 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அமெரிக்க அரசு கூறி உள்ளது.

அமெரிக்காவின் மெக்சிகோ வளைகுடா பகுதியில் புயல் மையம் கொண்டு இருந்தது. அந்த புயலுக்கு 'மைக்கேல்' என்று பெயர் சூட்டி இருந்தனர். அது, புளோரிடா மாகாணத்தை நோக்கி நகர்ந்து நேற்று முன்தினம் அமெரிக்காவை புயல் தாக்கியது.

முதலில் புளோரிடா மாகாணத்தை தாக்கிய புயல் பின்னர் அலபாமா, ஜோர்ஜியா மாகாணங்களையும் தாக்கியது. மணிக்கு 200இல் இருந்து 240 கிலோமீட்டர் வேகத்தில் பயங்கர சூறாவளி காற்று வீசியது.

அத்துடன் பலத்த மழையும் பெய்தது. சூறாவளியால் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. வழக்கத்தை விட 12 அடி உயரத்துக்கு ராட்சத அலைகள் எழுந்து வந்தன. இதனால் பல இடங்களில் நிலப்பரப்புக்குள் தண்ணீர் புகுந்தது.

மழைநீர் மற்றும் கடல் நீரால் புளோரிடாநகரம் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது.

புயலால் 3 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அமெரிக்க அரசு கூறி உள்ளது.

மழை மற்றும் புயலில் சிக்கி 13 பேர் இறந்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்துள்ளனர்.

கடந்த 100 ஆண்டுகளில் அமெரிக்காவை தாக்கியதில் இதுதான் அதிசக்தி வாய்ந்த புயல் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

# நைஜீரியாவில் பேரழிவை ஏற்படுத்தியுள்ள வெள்ளம்; உயிரிழப்புகளுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் இரங்கல்

நியூயோக், ஒக்.13

நைஜீரியாவில் பெய்து வரும் கடும்மழை மற்றும் வெள்ளப் பெருக்கில் ஏராளமானோர் உயிரிழந்துள்ள நிலையில், ஐ.நா. பொதுச்செயலாளர் கவலை தெரிவித்துள்ளார்.



நைஜீரியாவில் கடந்த ஒகஸ்ட் மாதம் கடும்மழை தொடங்கி பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக நீர்நிலைகள் நிரம்பி வழிகின்றன. ஆறுகளில் அபாய அளவைத் தாண்டி வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. பல்வேறு ஆறுகளின் கரைகளில் உடைப்பு ஏற்பட்டு ஊருக்குள் தண்ணீர் புகுந்தது.

மழையால் ஏற்பட்ட பெரு வெள்ளம் மற்றும் ஆறுகளில் ஏற்பட்ட உடைப்பினால் வீதிகள், பாலங்கள் என உள்கட்டமைப்பு கடுமையாக சேதமடைந்துள்ளது. லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

5.6 லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 1.5 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் மூழ்கி பயிர்கள் அழுகி உள்ளன. வெள்ளத்தில் சிக்கி 200 பேர் உயிரிழந்துள்ளனர். 1310 பேர் காயமடைந்துள்ளனர்.

கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மாநிலங் கள் தேசிய பேரிடர் பாதித்த பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், நைஜீரியாவில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் அன் டோனியோ குட்டரெஸ் கவலை தெரிவித்துள்ளார்.

மழை வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள அவர், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுவதாகவும் கூறினார்.

மேலும் இந்த கடினமான நேரத்தில் நைஜீரியாவுக்கு ஐ.நா. உறுதுணையாக இருப்பதுடன், தேவையான ஆதரவை வழங்க தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஐ.நா. சார்பில் உணவு விநியோகம், அவசரகால மருத்துவ உதவி மற்றும் கொலரா, மலேரியா போன்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கும் நோய் தடுப்பு நடவடிக்கைகள், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு சுகாதார பெட்டகங்கள் விநியோகம் என பல்வேறு பணிகள் நடைபெற்றுவருகின்றன என்றும் ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

# தமிழ் சினிமாவில் தொடரும் பாலியல் புகார்கள்!




## நடிகர்கள் ஜோன் விஜய், கல்யாண் இருவர் மீதும் குற்றச்சாட்டு!

சென்னை, ஒக்.13

கவிஞர் வைரமுத்து பாலியல் தொல்லை கொடுத்தார் என புகார் கூறியுள்ள சின்மயி, நடிகர்கள் கல்யாண் மற்றும் ஜோன் விஜய் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டையும் அவரது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

பாலியல் புகார் கூறிய பாடகி சின்மயிக்கு 'மி டு' மூலம் அது குறித்த விவரங்களை பலர் அனுப்பி வருகிறார்கள்.

இலங்கையை சேர்ந்த பெண் ஒருவரும் பெயர் குறிப்பிடாமல், நடன இயக்குநரும் கல்லூரி வாசல், சிட்டிசன், வா டீல் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள வில்லன் நடிகருமான கல்யாண் பாலியல் தொல்லை கொடுத்த விவரத்தை அனுப்பி உள்ளார்.

அதை சின்மயி டுவிட்டரில் வெளியிட்டு உள்ளார்.

அதில் இலங்கை பெண் குறிப்பிட்டுள்ளவை வருமாறு–

நான் இப்போது கொழும்பில் வசிக்கிறேன். எனக்கு நடனம் பிடிக்கும். தமிழ் சினிமாவில் டான்சராகும் ஆசையில் 2010 ஆம் ஆண்டு சென்னை வந்தேன். டான்ஸ் மாஸ்டர் கல்யாணைச் சந்தித்து அவருடன் நடனம் ஆடினேன். அப்போது அவர் என்னை கண்ட இடத்தில் தொட்டார். உடனே ஆடுவதை நிறுத்தி விட்டேன்.

எனது தொலைபேசி இலக்கத்தை வாங்கி அன்று இரவே போன் செய்தார். அவருக்கு உதவியாளராக இருக்க வேண்டுமானால் அவரோடு படுக்க வேண்டும் என்றார். நான் அதிர்ந்து போனேன். எனது கனவுகள் சிதைந்துபோனமையை உணர்ந்தேன்.

திறமையை மட்டும் நம்பி சினிமாவில் இருக்க முடியாது என்று உணர்ந்து இலங்கைக்கே திரும்பி விட்டேன் என்று அவர் கூறியுள்ளார்.

இதுபோல் கபாலி, சாமி-2, ராவணன், கோ உட்பட பல படங்களில் நடித்துள்ள வில்லன் நடிகர் ஜோன் விஜய் மீது ஒரு பெண் தெரிவித்துள்ள பாலியல் புகாரை பெங்களூருவை சேர்ந்த பெண் பத்திரிகையாளர் சந்தியா மேனன் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

ஒரு பண்ணை வீட்டில் நடந்த விருந்து நிகழ்ச்சியில் ஜோன் விஜய் தன்னிடம் தவறாக நடக்க முயன்றார் என்றும், அவரை மற்ற பெண்கள் துணையுடன் விரட்டினேன் என்றும் அந்த பெண் கூறியுள்ளார்.

விருந்தில் தடை செய்யப்பட்ட கொகைன் போதைப்பொருள் தாராளமாக பயன்படுத்தப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டை ஜோன் விஜய் மறுத்துள்ளார். இந்த புகார்கள் தமிழ் பட உலகில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

# சின்மயி பாலியல் குற்றச்சாட்டு; சினிமா பிரபலங்கள் ஆதரவு!

சென்னை, ஒக்13

கவிஞர் வைரமுத்து மீது பாலியல் குற்றச்சாட்டை கூறியுள்ள பாடகி சின்மயிக்கு ஆதரவாக சினிமா பிரபலங்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

கவிஞர் வைரமுத்து மீது பாடகி சின்மயி பாலியல் புகார் கூறியிருப்பது சினிமா வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் பெங்களூரைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் சந்தியாமேனன்.

இவர் தனது டுவிட்டரில் பாடலாசிரியர் வைரமுத்து ஒரு பெண்ணிடம் அத்துமீறி நடந்து கொண்டார் என்று தகவல் வெளியிட்டு இருந்தார். இதை பாடகி சின்மயி தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்து இருந்தார்.

உடனே பெயர் குறிப்பிடாத பெண்ணின் தகவலை எப்படி நீங்கள் நம்பலாம் என்று சின்மயிக்கு எதிராக கண்டன குரல்கள் எழுந்தன. இது உண்மை தான். நம்புங்கள் என்று பதில் அளித்த சின்மயி இறுதியில் தானே வைரமுத்துவால் பாதிக்கப்பட்டேன் என்று டுவிட்டரில் அதிர்ச்சி தகவல் வெளியிட்டார்.

சுவிற்சர்லாந்தில் இலங்கை தமிழர்கள் தொடர்பான 'விழ மாட்டோம்' என்ற நிகழ்ச்சியில் பாடுவதற்காக நான் சென்று இருந்தேன். நிகழ்ச்சி முடிந்து அனைவரும் சென்றுவிட்ட நிலையில் என்னையும், எனது தாயையும் மட்டும் ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் இருக்கச் சொன்னார்.



எதற்கு என்று கேட்டபோது, வைரமுத்துவை ஹோட்டலில் போய் பாருங்கள் அவருக்கு ஒத்துழைப்பு கொடுங்கள் என்றார். நாங்கள் கோபத்துடன் மறுத்து விட்டு உடனே இந்தியா திரும்பி விட்டோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சின்மயி அளித்த பேட்டியில் கவிஞர் வைரமுத்து அவரது அலுவலகத்தில் 2 பெண்களை முத்தமிட முயற்சித்தார். என்னைப் போல பாதிக்கப்பட்ட பாடகிகள் இனி மேல் பேசுவார்கள்.

வைரமுத்துவின் அதிகார பலத்தால் வெளியே பேச தயங்குகிறார்கள். விளம்பரத்துக்காக இதை நான் சொல்லவில்லை, இதனால் எனக்கு இனிமேல் பாடவாய்ப்பு கிடைக்குமா? என்று தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

முதலில் இதற்கு பதில் அளிக்காமல் மௌனம் காத்த கவிஞர் வைரமுத்து இப்போது தன் மீதான பாலியல் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

அவர் தனது டுவிட்டரில், அறியப்பட்டவர்கள் மீது அவதூறு பரப்பும் அநாகரிகம் நாடெங்கும் இப்போது நாகரிகமாகி வருகிறது. அண்மைக்காலமாக நான் தொடர்ச்சியாக அவமானப்படுத்தப்பட்டு வருகிறேன். அவற்றுள் இதுவும் ஒன்று. உண்மைக்குப் புறம்பான எதையும் நான் பொருட்படுத்துவதில்லை, உண்மையை காலம் சொல்லும் என வைரமுத்து பதிவிட்டு இருக்கிறார்.

வைரமுத்து பதில் அளித்த சில நிமிடங்களிலேயே, அவர் ஒரு பொய்யர் என சின்மயி தனது டுவிட்டரில் பதில் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினையில் சின்மயிக்கு ஆதரவாக நடிகர்கள் பிரகாஷ்ராஜ், சித்தார்த், நடிகை ஸ்ரீரெட்டி ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தொடர்ந்து சின்மயிக்கு ஆதரவாக நடிகைகள் ஆன்ட்ரியா, சமந்தா, வரலட்சுமி, இசை அமைப்பாளர் ஜிப்ரான் ஆகியோரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# தஜிகிஸ்தான் வெளியுறவு துறை அமைச்சருடன் சுஷ்மா சந்திப்பு!



துஷ்பாண்டே, ஒக்.13

தஜிகிஸ்தானில் பயணம் செய்துள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தலைநகர் துஷ்பாண்டேவில் அந்த நாட்டு வெளியுறவு துறை அமைச்சரை நேற்று சந்தித்து பேசினார்.

இந்திய வெளியுறவு துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இரண்டு நாள் பயணமாக தஜிகிஸ்தான் நாட்டுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ளார்.

தஜிகிஸ்தான் தலைநகர் துஷ்பாண்டேவில் நடைபெறவுள்ள ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் சுஷ்மா சுவராஜ் கலந்து கொள்கிறார்.

இந்த மாநாட்டில் சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் கொரியா தீபகற்ப பகுதிகளில் நிலவும் சூழ்நிலைகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

இந்த நிலையில், தஜிகிஸ்தானில் பயணம் செய்துள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தலைநகர் துஷ்பாண்டேவில் அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் சிரோஜிதின் முஹ்ரிடினை சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார். அப்போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக பேசினார் என வெளியுறவு துறை தெரிவித்துள்ளது.

மேலும், ஆப்கானிஸ்தானின் மூத்த தலைமை அதிகாரி அப்துல்லா அப்துல்லாவையும் சுஷ்மா சுவராஜ் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்.

# லஞ்சம் வாங்குவதில் தமிழகம் 3 ஆவது இடம்!

சென்னை, ஒக்.13

லஞ்சம் கொடுப்பதிலும், வாங்குவதிலும் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டில் 52 சதவீதம் பேர் லஞ்சம் கொடுக்கின்றோம் என கூறியுள்ளனர்.

இந்தியாவில் எந்த மாநிலத்தில் லஞ்சம், ஊழல் அதிகமாக உள்ளது என்று சமீபத்தில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

வடகிழக்கு மாநிலங்கள் சிக்கிம், காஷ்மீர், இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், ஒடிசா, ஜார்கண்ட் மற்றும் சத்தீஸ்கர், மாநிலங்கள் தவிர 15 மாநிலங்களில் மட்டும் இந்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

இந்தியாவில் லஞ்சம் அதிகமாக வாங்கப்படும் உத்தரபிரதேச மாநிலத்தில் சொத்துப்பதிவு, வரித்துறை, போக்குவரத்து, மின்சாரத்துறை போன்றவைகளில் லஞ்சம் கொடுத்தால் தான் வேலை நடக்கிறது என்று மக்கள் சொல்கிறார்கள்.

உத்தரபிரதேசத்தில் 59 சதவீதம் பேர் லஞ்சம் கொடுக்கின்றோம் என கூறியுள்ளனர். பஞ்சாப் மாநிலம் இரண்டாவது இடத்தில் உள்ளது. லஞ்சம் கொடுப்பதிலும், வாங்குவதிலும் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சருடன் அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேச்சு!

பாரிஸ், ஒக்13

மூன்று நாள் உத்தியோக பூர்வ பயணமாக பிரான்ஸுக்குச் சென்றுள்ள இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், அந்த நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

பிரதமர் மோடி மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மாக்ரான் இடையே கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற சந்திப்பின் போது இருநாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மட்டத்திலான வருடாந்த சந்திப்பு நடத்துவதற்கு இருவரும் பரஸ்பரம் ஒப்புதல் வழங்கினர்.

அதனடிப்படையில் இந்த ஆண்டுக்கான சந்திப்பில் பங்கேற்பதற்காக மூன்று நாள் பயணமாக நிர்மலா சீதாராமன் பிரான்ஸ் சென்றுள்ளார்.





# இந்து சமுத்திரத்தின் ஆதிக்கம் – பாதுகாப்பு இனி எந்த நாட்டிடம்?

ஈழத் தமிழர்களின் திருகோணமலைத்துறைமுகம், வடக்கு – கிழக்குக்கடற்பிரதேசங்களை பிரதானமாகக் கருதி, இலங்கை இந்தியாவை மையமாகக் கொண்ட இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக இலங்கையின் தலைநகர் கொழும்பில் சர்வதேச மாநாடு ஒன்று நடைபெற்றது.

நேற்றும் முந்தினமும் இடம்பெற்ற இந்த மாநாட்டில், இந்தியா, சீனா, ஜப்பான் அமெரிக்க, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளின் பிரதான இராஜதந்திரிகள் கலந்துகொண்டனர். இந்தியப் பிரதி பாதுகாப்பு ஆலோசகர் பங்கஜ் சரண், ஐக்கிய அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் துணைச் செயலாளர் எலிஸ் ஜீ. வெல்ஸ், சீன வெளிவிவகார அமைச்சின் எல்லைத் திணைக்களம் மற்றும் சமுத்திர விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் ஹீ ஷியான்லியாங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் அனில் சூக்லால் மற்றும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் சிறப்புத் தூதுவர் பீற்றர் தொம்சன் ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்குகொண்டனர்.

ஜப்பான் சார்பில் கொழும்பில் உள்ள தூதரக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டுக்கான ஏற்பாட்டை இலங்கை அரசு செய்திருந்ததாக ஊடகங்களுக்கு கூறப்பட்டுள்ளது.

**ரணிலின் சத்தியத்தில் நம்பிக்கை இல்லை**

அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் இராணுவத்தேவைக்குப் பயன்படுத்த



அனுமதிக்கப்படாது என இலங்கைப் பிரதமர் ரணில் செய்துள்ள சத்தியத்தை அமெரிக்கா. இந்தியா. ஜப்பான் போன்ற நாடுகள் நம்புவதாக இல்லை. இந்த நிலையில் கொழும்பில் நடைபெற்ற இரண்டு நாள் சர்வதேச மாநாடு குழப்பமடையலாம், அல்லது முரண்பாட்டில் ஓர் உடன்பாடாக நிறைவடையலாம் என்பது அவதானிகளின் பார்வையாக இருந்தது.

ஆனால், அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் அழுத்தங்களினால் இந்த மாநட்டை இலங்கை அரசு ஏற்பாடு செய்ததாக உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் அதுவும் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின்னரான நிலையில் இவ்வாறான மாநாடு ஒன்றை நடத்த இந்த நாடுகளுக்கு வசதி ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

மாநாட்டின் நோக்கம், இந்து மா சமுத்திரத்தின் பாதுகாப்பு என்று கூறினாலும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா முழுமையாக தனது இராணுவத் தேவைக்கு பயன்படுத்தவுள்ளது என அமெரிக்கா, ஜப்பான் இந்தியா உள்ளிட்ட நாடுகள் குற்றம் சுமத்தி வரும் நிலையில் இந்த மாநாடு நடைபெற்றது.

**கூட்டுப் பயிற்சி**

இந்து மா சமுத்திரத்து சமுத்திரம் அடங்கலாக ஆசிய – பசுபிக் கடல் (Indo - Pacific) பிராந்தியங்களுக்கான பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் அமரிக்கா, இந்தியா. ஜப்பான் ஆகிய நாடுகளின் கடற்படையினர் இணைந்து கூட்டுப் பயிற்சி (Malabar exercise) நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். 2015 ஆம் ஆண்டில் இருந்து இவ்வாறான கூட்டுப் பயிற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. அதே வேளை, இலங்கை யின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா தனது இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தும் என அமெரிக்க உப ஜனாதிபதி மைக் பென்ஸ் (Mike Pence) கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் நியூயோர்க்கில் கூறியிருந்தார். ஹட்சன் நிறுவனத்தில் இடம்பெற்ற வெளியுறவுக் கொள்ளை தொடர்பான விளக்கவுரை ஒன்றை அவர் நிகழ்த்தியிருந்தார். அமெரிக்காவின் கொள்கை வகுப்பாளர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். ஆகவே மைக் பென்ஸ் இவ்வாறு கூறியுள்ள நிலையில் கடந்த 11, 12ஆம் திகதிகளில் கொழும்பில் இந்து மா சமுத்திரத்தின் பாதுகாப்பு, பயன்பாடுகள் தொடர்பான மாநாடு இடம்பெற்றமைகுறிப்பிடத் தக்கது.

ஆனாலும் இரண்டு நாள் மாநாட்டில் இந்து சமுத்திரத்தில் சர்வதேச சட்டத்தைப் பலப்படுத்தல், கடல்சார் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் சாசனம், இந்து சமுத்திரத் தின் பொருளாதாரம், நவீன அரசுகளின் புதிய வளர்ச்சி மாற்றங்கள், அபிவிருத்தியை மையமாகக் கொண்டு சமுத்திரங் களை பலப்படுத்தல், போதைப்பொருள் கடத்தல், ஆட்கடத்தல், கடல்வள மாசுபாடு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு கூறியுள்ளது.

**போர்க்கப்பல் அடுத்தடுத்து வருகை**

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் போர்க் கப்பல்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் கொழும்புத் துறைமுகத்துக்கும் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகமான திருகோணமலைத் துறைமுகத்துக்கும்வந்துசென்றிருந்தன.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் ஜப்பான் வெளியுறவு அமைச்சர் கஸூயுகிநகானே, (Kazuyuki Nakane) பாதுகாப்புத் துறை அமைச்சர் இட்சுனோரி ஒனேடேரா (Itsunori Onodera) ஆகியோர் இருவார இடைவெளியில் கொழும்புக்கு வந்து சென்றிருந்தனர்.

அம்பாந்தோட்டைத்துறை முகம் அனைத்து நாடுகளின் பயன்பாட்டுக்கும் அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனேடேரா, கொழும்பில் கட்டளை பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில் கொழும்பில் இந்த மாநாடு நடைபெறுகிறது. அதே வேளை, சீனக் கடற்படையின் நீர்மூழ்கி ஆதரவுக் கப்பல் கடந்த வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.

## கொழும்பில் நேற்றும் முந்தினமும் மிக முக்கியமான சர்வதேச மாநாடு

இந்தியாவும் ஜப்பானும் சீனாவின் பிராந்திய நகர்வுகளுக்கு எதிரான அல்லதுஅந்தநகர்வுகளைஅவதானித்து மாற்று வழிகளை ஏற்படுத்தக் கூடிய பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்றை கடந்த ஆண்டு மே மாதம் நடத்தியிருந்தது.

**சீனாவின் நீர்மூழ்கி**

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகியநாடுகள் இலங்கையில்சீனாவின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கும் அல்லதுதடுக்கும்நோக்கிலும்செயற்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்டு வந்த நிலையில், சீனாவின் நீர்மூழ்கி ஆதரவுக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள் ளதாக அவதானிகள் கூறுகின்றனர். இரண்டாயிரத்து 333 ஹெக்டயர் கடல் பிரதேசத்தை மண்ணால் நிரப்பி செய்யப்பட்டு வரும் கொழும்பு போட் சிற்றித் திட்டம் குறித்து, ஜப்பான் இலங்கை அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக தனியான சட்டமூலம் ஒன்றை இலங்கை அரசமைப்பில் இணைப்பதற்கு இலங்கை அரசு உடன்பட்டுள்ளது. இது தொடர்பாக இலங்கை நாடாளுமன்றத்திலும் சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு போட் சிற்றிப் பிரதேசத்தை தனியான பகுதியாகக் காண்பித்தே புதிய சட்ட மூலம் ஒன்று வரையப்படுகின்றது. ஆகவே சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் இந்து மா சமுத்திரத்தின் பாதுகாப்புக் குறித்த எதிர்காலம், எவ்வாறு அமையும் என்பது தொடர்பாகவும் இந்த மாநாட்டில் கேள்விகள் எழுப்பப்படலாம் என கொழும்பு அரசியல் தகவல்கள் எதிர்பார்த்தன.

இரண்டு நாள் சாவதேச மாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்களை இலங்கையில் அடுத்து ஆட்சிக்கு வரவுள்ள அரசாங்கம் எதுவாக இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதான நிலைப்பாடு.

**சீனாவில் ‘கண்’**

இறுதிப் போருக்கு உதவியளித்த அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் தமக்கிடையேயான அரசியல், பொருளாதார போட்டிகளின் மத்தியிலும் இலங்கை மீதான சீனாவின் செயற்பாடுகள் குறித்து ஒரே புள்ளியில் நின்று கவனம் செலுத்துகின்றன.

அதற்காக வடக்கு – கிழக்குத் தமிழர் தாயகப் பிரதேசத்தில் உள்ள கடற் பகுதிகள் மற்றும் திருகோணமலைத் துறைமுகம் ஆகியவற்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டுள்ளன.

குறிப்பாக திருகோணமலையின் கடல் பகுதியை மையப்படுத்திய எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் பற்றிய ஆய்வு நடவடிக்கைகள் சென்ற செப்ரெம்பர் மாதம் இரண்டாம் திகதி அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கான ஒப்பந்தம் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி இலங்கை அரசுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே இலங்கை மீதான சகலவிதமான அழுத்தங்கள் மற்றும் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகக் கடற் பிரதேசங்கள் துறைமுகங்கள் என அனைத்து வளங்ளையும் பயன்படுத்தக்கூடிய அதிகாரத்தை எடுத்துக் கொண்ட சூழலில் இந்த சர்வதேச மாநாடு நடைபெற்றது.

அதேவேளை, இந்தியாவும் ஜப்பானும் சீனாவின் பிராந்திய நகர்வுகளுக்கு எதிரான அல்லது அந்த நகர்வுகளை அவதானித்து மாற்று வழிகளை ஏற்படுத்தக் கூடிய பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்றை கடந்த ஆண்டு மே மாதம் நடத்தியிருந்தது.

இதன் பின்னணியிலேதான் கடந்த ஓகஸ்ட் மாதம் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனேடேரா புதுடில்லிக்குச்சென்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தாராமனைச் சந்தித்திருந்தார்.

அதன் பின்னரே அவர் கொழும்புக்கும் வருகை தந்திருந்தார். குறிப்பாக திருகோணமலைத் துறைமுகம் நரேந்திர மோடி அரசின் ஒத்துழைப்புடன் அமெரிக்காவிடம் கையளிப்பதற்கு ஜப்பான் – இந்திய உறவும் ஓர் காரணமாகும் என அரசியல் ஆய்வுகள் கூறுகின்றன.

திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவின் நரேந்திர மோடி அரசு அமெரிக்காவுக்குத் தாரை வார்த்துள்ளது என கூர்மை செய்தித்த தளத்தில் செய்திக் கட்டுரை ஒன்றும் கடந்த செப்ரெம்பர் மாதம் பிரசுரமாகியிருந்தது.

**இந்தியா - ஜப்பான்**

இந்தியா ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தமதுபாதுகாப்புஒத்துழைப்புத்தொடர்பாக ஆராய்ந்துள்ளன. (Strengthen defence cooperation) கடந்த ஆண்டு மே மாதம் இந்தப் பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பான கூட்டம் ஜப்பானில் நடைபெற்றது. இந்திய – ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் பங்குபற்றியிருந்தனர்.

ஆனால், சீனாவின் இராணுவத் தேவைக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகம் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் சத்தியம் செய்திருந்தார்.

சீனாவில் உள்ள இலங்கைக்கான தூதுவர் கருணாசேன கொடித்துவக்கு கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னரும் ரணிலைப் போன்று சத்தியம் செய்திருந்தார். அதாவது சீனாவின் இராணுவத் தேவைக்கு அம்பாந்தோட்டையைப் பயன்படுத்த இல்ங்கை அனுமதிக்காது என்று அவர் உறுதியளித்திருந்தார்.

ஆனாலும் அமெரிக்கா. இந்தியா. ஜப்பான் போன்ற நாடுகள் இந்த சத்தியங்களை நம்புவதாக இல்லை. இந்த நிலையில் கொழும்பில் நடைபெற்ற இரண்டு நாள் சர்வதேச மாநாடு குழப்பமடையலாம். அல்லது முரண்பாட்டில் ஓர் உடன்பாடாக நிறைவடையலாம் என்பது அவதானிகளின் பார்வையாக இருந்தது.

# பொருளாதார விடயத்தில் நல்லாட்சி அரசின் இயலாத் தன்மை வெளிப்படையாக அம்பலம்

## வரதராஜப்பெருமாள் அறிகை மூலம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.13

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து வடக்கு – கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் செயலாளருமான அ. வரதராஜப் பெருமாள் விளக்கமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:–

நாட்டில் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்தியிருப்பதாக பெருமை கொள்ளும் இன்றைய அரசு நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதில் தனது இயலாமையையே தொடர்ந்து காட்டி வருகின்றது.

நாட்டின் பருமட்டான பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கும், சாதாரண மக்களினது வாழ்க்கைத் தரம் தொடர்ந்து வீழ்ச்சி அடைவதற்கும் கடந்த அரசு பெருமளவில் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன் சுமைகளையும், அமெரிக்காவின் அண்மைக்கால பொருளாதாரக் கொள்கைகளையும், சர்வதேச சந்தையில் தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும்எரிபொருள்களின்விலை உயர்வையும் காரணங்களாகக் காட்டி தனது பொறுப்பிலிருந்து இந்த அரசு தப்பித்துக் கொள்ள முற்படுவதாகவே தெரிகின்றது.

பெற்றோலியப் பொருள்களின் விலைகளை உடனடியாக மிகப் பெரிய அளவில் உயர்த்துவது அரசின் அநாவசியமான பதற்றத்தையே காட்டுகிறது.

அமெரிக்க டொலர் தொடர்பான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி 5 சதவீதமளவிலேயே ஏற்பட அரசே பெற்றோலியப் பொருள்களின் விலைகளையும் போக்குவரத்து கட்டணங்களையும் மற்றும் உணவுப் பொருள்களின் விலைகளையும், 10 சதவீதத்துக்கு மேல் அதிகரித்துள்ளது.

அதன் மூலம் நாட்டு மக்கள் மத்தியில் தமது பொருளாதார வாழ்வு தொடர்பான பயக் கெடுதிகளையே அரசு வளர்த்து விட்டுள்ளது. வர்த்தக முதலாளிகள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் விலைகளை உயர்த்துவதை உடனடியாகவே செய்வார்கள்.

ஆனால், என்ன காரணம் கொண்டும் பின்னர் விலைகளைக் குறைக்கமாட்டார்கள் என்பது பொதுவாகத் தெரிந்ததே. விலைக்குறைப்புகளைஅரசாலும் செய்ய முடிவதில்லை.

எனவே, மக்களின் வாழ்க்கைச் செலவுகளின் திடீர் உயர்வுக்கு காரணமாக அரசு செயற்பட்டுள்ளமை சாதாரண மக்களின் அடிப்படை வாழ்வாதார நலன்களுக்கு விரோதமானதாகும்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு உண்மையான காரணங்களில் பிரதானமானது வர்த்தக நிலுவையின் பாதகமான நிலைமை மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ளமையாகும்.

இந்த ஆண்டு ஏற்றுமதி வருமானத்தோடு ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவானது இரண்டு மடங்கையும் மீறியதாக இருக்கும் என கணிப்பிடப்படுகிறது.

வர்த்தக முதலாளிகளின் இலாப குவிப் புகளுக்கும், பணக்காரர்களின் சுகபோக வசதிகளுக்கும் வாய்ப்பாக இறக்குமதிகளுக்கான வசதிகளை தொடர்ந்து தாராளமாக்கி வருவதனாலேயே பாதகமான வர்த்தக நிலுவை மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

இதுவேதான் இப்போது அமெரிக்க டொலர் தொடர்பான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கு பிரதானமான காரணமாக உள்ளது.

பாதகமான வர்த்தக நிலுவையைக் குறைப்பதற்கு ஏற்றுமதிகளை குறுகிய காலத்தில் அதிகரிப்பதென அரசு கொண்டுள்ள



கொள்கைகளும் திட்டங்களும் அறிக்கைகளிலும் வாக்குறுதிகளிலுமே அழகாக உள்ளன. நடைமுறையில் எந்த வகையிலும் காத்திரமான முன்னேற்றங்களை இதுவரை ஏற்படுத்தவில்லை.

இப்போதுதான் – அதாவது நாட்டின் பொருளாதார நிலை மோசமான கட்டத்துக்குள் மூழ்கிய பின்னர்தான் நிதி அமைச்சர் உயர்மட்ட வகுப்பினரின் சொகுசு வாழ்க்கைத் தேவைக்கான இறக்குமதிகளில் சிலவற்றை கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்.

அது எவ்வளவு காலத்துக்கு தொடரும், எந்தளவுக்கு வெற்றிகரமாக அமையும் எனக் கூற முடியாது. கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாட்டுக்கொள்கைகள் கடந்த காலத்தில் அரசை மக்கள் வெறுக்கக் காரணமாய் அமைந்தபடியால் இந்த அரசு இறக்குமதிகளை போதிய அளவு கட்டுப்படுத்தவோ நெறிப்படுத்தவோ மாட்டாது என்பது தெளிவு.

அத்துடன், தாராளவாத பொருளாதாரக் கொள்கையில் ஊறிப் போன இந்த அரசு இறக்குமதி பிரதியீட்டுக் கொள்கையையும் கடைப்பிடிக்காது என்பது தெரிந்ததே.

கடந்த அரசு பெற்ற கடன்களை இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணமாகக் காட்டும் அரசு கடந்த மூன்று வருடங்களாகத் தனது பங்குக்கு வெளிநாட்டுக் கடன்களை வாங்கிக் குவித்த வண்ணமேதான் உள்ளது.

நாட்டின் பொருளாதாரக் கொள்கையில் தாராளவாத அணுகுமுறையை அடுத்தடுத்து விரிவாக்கும்போது தேசிய உற்பத்தி சார் துறைகள், நுகர்வோர் பாதுகாப்பு, தொழிலாளர்களின் உரிமைகள், நீதியான தேசிய வருமானப் பகிர்வு, இயற்கை வளங்களின் மற்றும் சுற்றுப் புறச் சூழல் பராமரிப்பு போன்றன தொடர்பாக அரசு தேவையான அளவுக்கு பொருளாதார நெறிப்படுத்தல் சட்டங்களையும், சரியான பொறி முறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். இங்கு இவற்றுக்கான நிலைமைகள் எங்குமே இல்லை.

நோய்க்கான காரணங்கள் ஏதோ இருக்க கண்ணை மூடிக் கொண்டு மருந்து கொடுக்கும் அணுகுமுறையை உடனடியாக அரசு நிறுத்த வேண்டும்.

திறந்த முதலாளித்துவ பொருளாதாரத்தைப் பிரசாரம் செய்து அதனைபின்தங்கியபொருளாதார நாடுகள் மீது திணித்தவையும் வளர்ச்சியடைந்த நாடுகளே.

இப்பொழுது அதே வளர்ச்சியடைந்த நாடுகள் திறந்த தாராளவாத பொருளாதார அணுகுமுறையின் பாதகங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள தமது தேசிய பொருளாதார நலன்களுக்கு சார்பான ஏற்பாடுகளை கட்டாயமாக்கிக் கொண்டு வருகின்றன.

எனவே, இலங்கையும் தாராளவாத திறந்த பொருளாதார அணுகுமுறை தொடர்வதை மீளாய்வு செய்து பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

திறந்த முதலாளித்துவக் கட்டமைப்பின் கட்டாக்காலித்தனங்களை கட்டுப்படுத்தி, நாட்டின் பொருளாதார செயன்முறைகளை நெறிப்படுத்துவதற்கான நடைமுறைகளை நிறைவேற்றுவதுடன், சுய பொருளாதார ஆதாரங்களின் அடிப்படையில் நீடித்து நிலைக்கும் வகையான பொருளாதார முன்னேற்றங்களுக்கு வழி வகுக்க வேண்டும்.

அதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமானவற்றை அரசு உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

அதாவது, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்தி சாதாரண மக்களின் வயிற்றைக்கட்டுகின்றதிட்டங்களை நிறுத்த வேண்டும்.

பொது மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடையும் போக்கை தடுத்து நிறுத்த அவசியமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

மேலும், நாட்டின் பொருளாதாரம் அடைந்துள்ள தரத்துக்கேற்ப போதியளவு வருமானத்தை கீழ்மட்டமக்களும்பெற்றுக்கொள்ளும் விதமாக நாட்டின் தேசிய வருமானம் பல்வேறு தரப்பட்ட மக்களிடையேயும் பகிரப்படுவதற்கு அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். வந்துள்ள தமிழக குழுவினர் நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் வழிபாடு



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள தமிழக குழுவினர் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு சென்று விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், துறைசார் வல்லுநர்கள் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் நேற்றுக் காலை நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களுக்கும் செல்லவுள்ள இக் குழுவினர் வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட பல தரப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்

இந்தக் குழுவில் தமிழ்நாடு – சென்னை பல்கலைக்கழகத்தின் அரசியல் பொதுநிர்வாகம் மற்றும் சர்வதேச விவகாரங்களிற்கான பீடத்தின் தலைவர் பேராசிரியர் இராமு.மணி வண்ணன், தடயவியல் நிபுணர் பேராசிரியர் சேவியர், மக்கள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் வழக்கறிஞர் கென்றிதிபேன், தமிழ் துறை பேராசிரியர் அரசேந்திரன், பேராசிரியர் குழந்தைசாமி, பேராசிரியர் இராணி செந்தாமரை, வழக்கறிஞரும் பெண்ணிய செயற்பாட்டாளருமான பாண்டிமாதேவி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# தெற்காசிய நாடுகளின் ஆய்வுக்குழுவுடன் மாகாண அமைச்சர் சிவநேசன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கடற்கரையோர சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பன தொடர்பாக தெற்காசிய நாடுகளில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ள இந்தியக் குழு வடக்குமாகாண விவசாய மீன்பிடி அமைச்சர் க.சிவநேசனை சந்தித்துள்ளது.

விவசாய அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



இதன்போது மீன்பிடி தொடர்பாக தெற்காசிய நாடுகள் சார்ந்து பொதுவான கொள்கையுருவாக்கம் தொடர்பாகவும் அமைச்சரால் கருத்துக்கூறப்பட்டது.

மேலும், வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கடற்படையினரால் மீன்பிடித் துறைமுகங்கள் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

# மற்றுமொரு காட்டு யானை உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.13

வெலிக்கந்தை ருகுணுகெத கிராமத்தில் ஓடைக்குள் விழுந்து உயிரிழந்த காட்டு யானையின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோமாவதிய வனப் பிரதேசத்தில் சுற்றித்திரிந்த யானையே இவ்வாறு உயிரிழந்துள்ளது என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓடைக்குள் விழுந்து உயிரிழந்திருந்த காட்டு யானையை அவதானித்த பிரதேசவாசிகள் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதன்பின்னர் அந்த அதிகாரிகள் சென்று சோதனை செய்துள்ளதுடன், அது 30 வயது மதிக்கத்தக்க யானை என்றும் தெரிவித்துள்ளனர்.

# சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட்; பங்களாதேஷ் அணி அறிவிப்பு



சிம்பாப்வே கிரிக்கெட் அணி, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இம் மாத இறுதியில் பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

அங்கு செல்லும் பங்களாதேஷ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இத்தொடருக்காக இரு அணிகளும் தங்களைத் தயார்படுத்திக் கொண்டு வருகின்றன. இதற்கிடையில் ஒருநாள் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மஸ்ரபீ மோர்டாசா தலைமையிலான 15 பேர் கொண்ட பங்களாதேஷ் அணியில், இத்தொடரில் அறிமுக வீரராக சகலதுறை வீரர் பஃஸல் மொஹமட் களமிறங்கவுள்ளார்.

33 வயதான பஸல் மொஹமட், இதுவரை ஐந்து சர்வதேச ரி–20 போட்டிகளில் விளையாடியிருந்தாலும், ஒருநாள் போட்டிகளில் விளையாடியது கிடையாது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இலங்கை அணிக்கெதிரான தொடரில் இடம்பெற்றிருந்த சகலதுறை வீரரான மொஹமட் சைபுதீன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆசியக் கிண்ண தொடரில் இடம்பெற்றிருந்த மொமினுள் ஹக், மொசெடக் ஹொசைன் மற்றும் சௌமியா சர்கார் ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

உபாதையில் இருந்து மீண்டுள்ள முஸ்தபீகுர் ரஹீம் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

முன்னணி வீரர்களான தமீம் இக்பால் மற்றும் சகிப் ஹல் ஹசன் ஆகியோர் உபாதைக் காரணமாக இத்தொடரில் விளையாடவில்லை. சகிப் ஹல் ஹசனுக்கு பதிலாக ஹரிபுல் ஹக் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

மஸ்ரபீ மோர்டாசா தலைமையிலான அணியில், லிடொன் தாஸ், இம்ருள் கைஸ், நஸ்முல் ஹொசைன், முஸ்தபீகுர் ரஹீம், மொஹமட் மிதுன், மொஹமதுல்லா, ஹரிபுல் ஹக், மெயிடி ஹசன், முஸ்தபிசுர் ரஹ்மான், நஸ்முல் இஸ்லாம், ருபெல் ஹொசைன், அபு ஹைடர், மொஹமட் சைபுதீன், பஸல் மொஹமட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி, எதிர்வரும் 21ஆம் திகதி டாக்காவில் நடைபெறவுள்ளது.

# லசித் மலிங்க மீதும் பாலியல் குற்றச்சாட்டு!



பெண்கள் தங்களுக்கு நிகழ்ந்த பாலியல் துன்புறுத்தல் குறித்தும், அதை செய்தவர் யார் என்பது குறித்தும் இரகசியங்களை டுவிட்டரில் வெளியிட்டு வருகின்றனர்.

அந்தவகையில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரும், மும்பை இந்தியன்ஸ் வீரருமான லசித் மலிங்க மீது முன்னணிப் பாடகி சின்மயி பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார்.

இதுகுறித்து, லசித் மலிங்கவால் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட பாலியல் தொல்லை என்று சின்மயி தனது பதிவில் கூறியிருப்பதாவது:–

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் மும்பையில் இருந்தபோது, நான் தங்கியிருந்த ஹோட்டலில் என் நண்பியும் இருந்தாள். அது ஐ.பி.எல் கிரிக்கெட் சீசனாகும்.

மிகவும் பிரபலமான இலங்கை கிரிக்கெட் வீரர் லசித் மலிங்கவை சந்தித்தேன். என் நண்பியைத் தேடி அவள் தங்கியிருந்த பகுதிக்கு சென்றவேளை மலிங்கவைச் சந்திக்கும் சூழல் ஏற்பட்டது

அவர் என் நண்பி இருப்பதாகக் கூறி ஓர் அறையைக் காண்பித்தார். நான் அங்கு சென்று பார்த்த போது அவள் அங்கு இல்லை. உடனே மலிங்க என்னைக் கட்டிலின் மேல் தள்ளிவிட்டு என் முகத்தை நோக்கி நகர்ந்து வந்தார்.

நான் மிகவும் உயரமானவள் என்றபோதும் அவரின் வாட்டசாட்டத்திற்கு அச்சந்தர்ப்பத்தில் என்னால் அவரை எதிர்கொள்ள முடியவில்லை. நான் என் கண்கள் மற்றும் வாயை மூடிக்கொண்டேன். ஆனால் என் முகத்தை அவர் பயன்படுத்திக்கொண்டார்.

பின்னர் ஹோட்டல் ஊழியர் ஒருவர் கதவை தட்டினார். இதுதான் சமயம் என்று ஹோட்டல் குளியலறைக்குச் சென்று முகத்தைக் கழுவி விட்டு சுத்தம் செய்ய வந்த ஊழியருடனேயே அவ்விடத்தை விட்டு ஓடினேன்.

சிலர் என்னைப் பற்றி இப்படியும் யோசிக்கலாம். அதாவது, நான் ஏன் உள்ளே சென்றேன், அந்த வீரர் பிரபலமானவர் என்பதால் நான் வேண்டுமென்றே அவர் அறைக்குச் சென்றதாகக் கூடச் சிலர் கூறலாம். – என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினமும் இந்திய விமானப் பணிப்பெண் ஒருவர் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுனன் ரணதுங்க மீது பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கு ஏமாற்றம்



பாகிஸ்தான் மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோதிய முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றிச் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி டுபாயில் ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்தவகையில் முதல் இன்னிங்ஸில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 10 விக்கெட்களை இழந்து 482 ஓட்டங்களை பெற்றது.

இதில், மொஹமட் ஹபீஸ் 126 ஓட்டங்களையும், ஹரிஸ் சோஹைல், 110 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி, 202 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

அணி சார்பில் உஷ்மான் கவாயா 85, ஆரோன் பின்ச் 62 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில், பிலால் ஆசிப் 6 விக்கெட்களை வீழ்த்தினார்.

இந்நிலையில் 208 ஓட்டங்கள் முன்னிலையில், பதிலுக்கு 2 ஆவது இன்னிங்ஸில் விளையாடிய பாகிஸ்தான் அணி 6 விக்கெட்களை இழந்து 181 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர் 461 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 5 ஆம் நாள் நிறைவில் 8 விக்கெட்களை மாத்திரமே இழந்து 362 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை சமநிலை படுத்தியது.

முதலாவது இன்னிங்ஸில் 80 ஓவருக்குள் முதலாவது ஆஸ்திரேலிய அணியை வீழ்த்திய பாகிஸ்தான் அணியால், 2 ஆவது இன்னிங்ஸில் 140 ஓவர்கள் வீசியும் வெற்றியை உறுதிசெய்ய முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

# டினேஷ் கார்த்திக் அதிரடியாக நீக்கம்!

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டியில், தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் இந்திய அணியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணியில் ரோஹித் சர்மா, ஷிகர் தவான், ரிப் பந்த், டோனி, அம்பத்தி ராயுடு, மணிஷ் பாண்டே ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புவனேஸ்வர் குமார், பும்ரா ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக ஷமி, கலீல் அஹமட், சர்துல் தாக்கூர் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் இந்திய அணியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டு எதிரணியின் எம்.பியான குமார வெல்கம தெரிவித்தார்.

அத்துடன், இடைக்கால அரசில் தான் அமைச்சுப் பதவியை ஏற்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து இடைக்கால மேற்பார்வை அரசமைப்பதற்கு கூட்டு எதிரணி முயற்சித்து வருகின்றமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

சுதந்திரக்கட்சி மீது எனக்கு அக்கறை இருக்கின்றது. அதன் தலைவர் மீது எனக்கு விருப்பமில்லை. எனவே, இடைக்கால அரசமைக்கும் முயற்சிக்கு நான் எதிர்ப்பு. எனினும், அவ்வாறானதொரு சந்தர்ப்பம் ஏற்படும் பட்சத்தில் கூட்டு எதிரணிக்கு ஆதரவாக வாக்களிப்பேன். ஆனாலும், இடைக்கால அரசில் அமைச்சுப் பதவியை ஏற்கமாட்டேன். எதிரணி பக்கமே அமர்ந்திருப்பேன். மீண்டுமொருமுறை ஏமாறுவதற்கு நான் தயாரில்லை.

தான் எந்தப் பக்கம் இருக்கின்றாரோ அந்தப் பக்கமுள்ள தலைவருக்கு வால் பிடிப்பவர் தான் டிலான் பெரேரா. இடைக்கால அரசமைப்பதற்கு மைத்திரி பக்கமுள்ள 23 பேரில் 20 பேர் எதிர்ப்பை வெளியிடுவார்கள். அவர்கள் எந்நேரத்தில் வேண்டுமானாலும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணையலாம். – என்றார். (ஐ-07)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபாலவை நேற்று நாடாளுமன்றத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நாடாளுமன்றத்தில் நேற்று மகாத்மா காந்தியின் 150ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் பங்கேற்ற ஜனாதிபதி பின்னர் நாடாளுமன்றத்தில் உள்ள தனது அலுவலகத்தில் அமர்ந்திருந்தார். இதன்போது அங்கு சென்ற கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், பேச்சாளர் சுமந்திரன் ஆகியோர் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினர்.

இதன்போது, அரசியல் கைதிகள் தொடர்பில் சட்டமா அதிபர், நீதியமைச்சர் ஆகியோருடன் நடந்த சந்திப்புக்களில் என்ன விடயங்கள் பேசப்பட்டன என்று ஜனாதிபதி கூட்டமைப்பின் தலைவரிடம் வினவினார்.

அரசியல்கைதிகளில் இருவர் மாத்திரமே விடுவிக்கக்கூடியதாக இருக்கும் என்றும், ஏனையோருக்கு எதிராக வழக்குகள் உள்ளமையால் அவர்களை விடுவிப்பதில் சிக்கல் உள்ளது என்றும், இது தொடர்பில் சட்டமா அதிபரோ, நீதியமைச்சரோ திட்டவட்டமான பதில் எதையும் தரவில்லை என்றும் சுமந்திரன் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார்.

அத்துடன் அரசியல் கைதிகளில் பலர் 10 வருடங்களுக்கு மேல் சிறையில் உள்ளனர். ஆகவே இந்த விடயத்தில் பிரதமரும் ஜனாதிபதியும் இணைந்து அரசியல் தீர்மானம் ஒன்றை எடுத்துக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் சம்பந்தன் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, 10 வருடங்கள் முடிவடைந்தால் அனைவரையும் விடுவிக்கலாம்தானே என்று கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டம் முடிந்த பின்னர் சந்தித்துப் பேசி அரசியல் கைதிகள் விடுதலை குறித்து தீர்க்கமான முடிவு ஒன்றை எட்டுவோம் என ஜனாதிபதி கூட்டமைப்பின் தலைவரிடம் நேற்றைய சந்திப்பில் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உறுதிமொழியை அடுத்து, உண்ணாவிரதப் போராட்டத்தை எதிர்வரும் 17ஆம் திகதி வரை கைவிடுமாறு தாம் நேற்று மாலையே அரசியல் கைதிகளைத் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத்தார் எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் குறிப்பிட்டார். (ஐ)

## அச்சுவேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டார்.

அச்சுவேலி பத்தமேனி சூசையப்பர் வீதியில் மின் கம்பம் நடுவதற்காக நிலத்தைத் தோண்டிய போது அங்கு மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இதனை தொடர்ந்து அச்சுவேலிப்பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். நேற்றுச் சம்பவ இடத்துக்கு மல்லாகம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவும் சட்ட வைத்திய அதிகாரி மயூரதனும் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்றும் அந்தக் குழி மேலும் தோண்டப்பட்டபோது மேலும் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. கால், கை, விரல் மண்டையோடு பகுதிகள் மீட்கப்பட்டிருந்தன.

மீட்கப்பட்ட மனித எச்சங்கள் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

மின் கம்பம் நாட்டும் பணியைத் தொடர்ந்து மேற் கொள்ளவும் நீதிவான் அனுமதியளித்தார்.

மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-07)

## மேற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பவில்லை. அரசின் பட்ஜெட் கூடத் தோற்கடிக்கப்படக் கூடாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசில் இருந்து விலகுமானால் ரணில் தனித்து ஆட்சியமைக்கட்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பதவிகளை எடுக்காமல் வெளியில் இருந்து அதற்கு ஆதரவளிக்கட்டும். அதனை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம். புதிய அரசமைப்பு உட்பட்ட பல விடயங்களை நிறைவேற்ற இந்த அரசு தொடர வேண்டும் என்ற செய்தி ஜனாதிபதி மைத்திரியிடம் சொல்லப்பட்டுள்ளது.

இராஜதந்திரிகளின் இந்தத் திடீர் அழுத்தத்தால் அதிர்ந்து போயிருக்கின்றது கொழும்பு அரசியல்.

மறுபுறம் எதிர்வரும் திங்கட்கிழமை தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி செல்லவுள்ள பிரதமர் ரணிலை இந்தியப் பிரதமர் மோடி சந்திக்கவுள்ளார்.

இப்போதுள்ள நிலையில் கொழும்பு அரசியல் நிலைமை மாறுவதை புதுடில்லி விரும்பவில்லை என்ற செய்தியுடன் அப்படி ஒரு நிலைமை வருமாயின் ரணிலின் ஆட்சியைத் தொடர வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை மோடி இதன் போது சொல்வார் என அறிய முடிகின்றது.

இப்போதிருக்கும் நிலைமையைப் பார்த்தால் கொழும்பு அரசியலில் அதிரடி மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

மைத்திரியும் மஹிந்தவும் ஒருவருக்கொருவரைச் சந்தேகிப்பதும் இதற்கான மற்றுமொரு காரணம்.

வழமைபோல் பட்ஜெட் வெற்றியுடன் இந்த அரசு தனது பயணத்தைத் தொடரும் என்றே கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. (ஐ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை அவரது தாயார் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே கைது செய்தோம் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், பொம்மைவெளிப் பகுதியில் வைத்துச் சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிளாகக் கடமையாற்றுகிறார்.

விசாரணைகளின் பின் அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

தனது மகன் போதைப் பொருள் விற்பனை செய்பவர்களுடன் பொம்மைவெளிப் பகுதியில் நடமாடுகிறார் என்று சந்தேகநபரின் தாயார் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (ஐ)

## பட்ஜெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என அழுத்தங்களைக் கொடுக்க நான் தயாராக உள்ளேன். ஆனால் 2019ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நிராகரிப்பேன் எனக் கூறமாட்டேன். கட்சியின் நிலைப்பாடு எதுவோ அதுவே எனது நிலைப்பாடாகும் எனத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று வடக்கு முதலைச்சர் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட சித்தார்த்தன் எம்.பியிடம், அரசியல் கைதிகளுக்காக பட்ஜெட்டை எதிர்ப்பீர்களா? எனக் கேள்வி எழுப்பப்பட்டது. இதன் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல்கைதிகளின் விடயம் தொடர்பாகப் பேசுவதற்காகவே நான் வந்திருக்கிறேன். பட்ஜெட்டைப் புறக்கணிக்கவேண்டும் என்பதற்காக நான் வரவில்லை. நான் சரியாகச் சிந்திக்காது முடிவுகளை எடுக்க முடியாது. வார்த்தைகளை விட முடியாது.

நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அழுத்தங்களைக் கொடுக்கலாம்; கொடுக்கிறேன். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களிக்கப்போகிறோம் என்றால் நான் மட்டும் எதிராக வாக்களிக்கலாகாது.

நான் கட்சிக் கட்டுப்பாட்டுடன் வேலை செய்கிறேன். எங்களுக்குப் பொய்யான வார்த்தைகளை கூறிவிட்டுப் போக முடியாது. இந்த விடயத்தில் கட்சிதான் முடிவுகளை எடுக்கவேண்டும்.

அரசியல் கைதிகளை இந்த அரசு இலகுவாக விடுதலை செய்யப்போவதில்லை. அரசியல் கைதிகள் விடயத்தை இழுத்தடிக்கவே அரசு முயற்சிக்கிறது என்பதை நான் அரசியல் கைதிகளுக்கு நேரடியாகவே கூறியிருக்கிறேன். அரசியல் கைதிகள் தமது போராட்டத்தை ஆரம்பித்து 5ஆவது நாள் நான் அவர்களைச் சந்தித்து மேற்படி விடயத்தைக் கூறியிருக்கிறேன்.

உணவு தவிர்ப்பு போராட்டத்தை அரசியல் கைதிகள் நிறுத்தவேண்டும் எனவும் நான் கேட்டிருக்கிறேன். இந்த விடயம் தொடர்பாக பிரதமருடன் பேசி, ஓர் உத்தரவாதத்தையாவது தாருங்கள் எனக் கேட்டேன். ஆனால் பேசித் தீர்மானித்த பின்னரே அது குறித்து ஏதாவது செய்யலாம் எனப் பிரதமர் எனக்குக் கூறியிருக்கின்றார்– என்றார். (ஐ-07)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வெளியே வரட்டும். அப்போது மேலே பேசலாம்.

– இப்படி தீர்மானமொன்றை எடுத்துள்ளது கூட்டு எதிரணி.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது கருத்து வெளியிட்ட பலர் இடைக்கால அரசை ஏற்படுத்தும் யோசனைக்கு கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவை முறித்துக் கொண்டு வெளியில் வந்து பேசினால் அடுத்த கட்டம் பற்றி பேசலாம். அதற்கு முன்னர் எதையும்பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. சுதந்திரக் கட்சி வெளியே வராமல் மைத்திரி நகர்த்தும் அரசியல் நகர்வுகளை நம்பக்கூடாது. எனவே, அவர்கள் முடிவு எடுக்கும் வரை காத்திருப்போம். – என்று இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்தி எம் பிக்களான முன்னாள் அமைச்சர்கள் சிலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 16ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை இடைக்கால அரசைத் தீர்மானிக்கும் – என்று கூறப்பட்டது. (ஐ)

## 46ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன முன்னிலையில் நேற்று இரவு பதவியேற்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், புதிய பிரதம நீதியரசராக நளின் ஜெயலத் பெரேராவின் பெயர் முன்மொழியப்பட்டது.

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று நண்பகல் அரசமைப்புச் சபை கூடி அவரது நியமனத்தை உறுதி செய்தது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப்பின் பதவிக்காலம் நேற்று முடிவடைந்தது. இந்தநிலையில், 46 ஆவது பிரதம நீதியரசராக நளின் பெரேரா, நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார்.

இதன்மூலம் 30 ஆண்டுகளுக்குப் பின்னர், பிரதம நீதியரசராக, பொறுப்பேற்கும் முதலாவது தொழில்சார் நீதியரசராக இவர் பதவியேற்றார்.

நீதிவானாகப் பணியை ஆரம்பித்து, பிரதம நீதியரசராக உயர் பதவிக்கு கடைசியாக நியமிக்கப்பட்டவர் நீதியரசர் பரிந்த ரணசிங்க ஆவார்.

அதற்குப் பின்னர், நளின் பெரேராவே, நீதிவானாகப் பணியை ஆரம்பித்து, பிரதம நீதியரசராகப் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். (ஐ)

## சீனியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

சீனிக்கானகட்டுப்பாட்டுவிலை நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்தது.

பொதி செய்யப்பட்ட வெள்ளைச் சீனி ஒரு கிலோ கிராமின் அதிகபட்ச சில்லறை விலை 105 ரூபாவாகவும், பொதி செய்யப்படாத வெள்ளைச் சீனி ஒரு கிலோ கிராமின் அதிகபட்ச சில்லறை விலை 100 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சீனியின் மொத்த விற்பனை விலையாக 92 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ஐ)

## லலித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டயலொக் நிறுவனத்தின் அதிகாரியிடம் விசாரணைகள் மற்றும் குறுக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் வழக்கு வரும் ஜனவரி 11ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாண நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித்குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் ஆரம்பத்தில் சாட்சியமளித்திருந்தனர்.

தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்திருந்தனர்.

அத்துடன், கடந்த தவணைக்கு முன்னதான தவணையில், லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான முறைப்பாட்டைப் பதிந்த அச்சுவேலி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சாட்சியமளித்தார்.

இந்தநிலையில் இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்களின் சட்டத்தரணிகள் மன்றில் தோன்றினர். எதிர் மனுதாரரான யாழ்ப்பாணம் இராணுவத்தளபதி சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணியும் மன்றில் முன்னிலையானார்.

லலித் வீரராஜின் அலைபேசி இணைப்பின் 2011ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி முதல் டிசெம்பர் 15ஆம் திகதிவரையான விவரங்களை டயலொக் நிறுவனத்தின் பிரதம அதிகாரி நீதிமன்றில் சமர்ப்பித்து சாட்சியமளித்தார்.

இந்த நிலையில் வழக்கு விசாரணையை வரும் ஜனவரி 11ஆம் திகதிவரை ஒத்திவைத்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

# தமிழ் அரசியல் கைதிகளுக்காக மல்லாவியில் திரண்டனர் மக்கள்





முல்லைத்தீவு, ஒக். 13

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பிலும் அரசு உடன் பதில் வழங்க வேண்டியும் மல்லாவி அணிஞ்சியன்குளம் அ.த.க. பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடிய மக்கள், வணிகர் கழக உறுப்பினர்கள் மற்றும் ஓட்டோ உரிமையாளர்கள் உள்ளிட்ட பலர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணி மல்லாவி – துணுக்காய் வீதி வழியாக மல்லாவி சிவன் ஆலயம் வரை நகர்ந்து நிறைவடைந்தது. அங்கு கண்டன உரைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் சிலர் துணுக்காய் பிரதேச செயலகம் சென்று பிரதேச செயலாளரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

போராட்டத்தில் வர்த்தக நிலையங்களை மூடி வர்த்தகர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், ஓட்டோச் சாரதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்தப் பேரணியில் மல்லாவிப் பகுதியில் வர்த்தக நிலையங்களை நடத்தி வரும் முஸ்லிம் வர்த்தகர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## பட்டதாரிகளுக்கு நியமனங்களை அரசு விரைவில் வழங்கவேண்டும்

### யாழ். மாட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

தமக்கான நியமனங்களை அரசு விரைவாக வழங்க வேண்டுமென வடக்கு மாகாணப் பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நியமனம் பெறுவதற்கான பதிவுகளை மாவட்ட ரீதியாகப் பட்டதாரிகள் ஆரம்பித்துள்ளனர். அந்தவகையில் யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான பதிவுகள் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக நேற்று நடைபெற்றன.

யாழ். மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று திரண்ட பட்டதாரிகள் தமது பதிவுகளை மேற்கொண்டமையுடன் தமக்கான வேலைவாய்ப்புக்களையும் வழங்கவேண்டுமென்று கோரினர்.

குறிப்பாக நீண்ட காலமாக வேலையில்லாமல் உள்ள பட்டதாரிகளுக்கு விரைவாக முறையான அரச நியமனங்களை வழங்கவேண்டும். அந்த நியமனங்களை விரைந்து பெற்றுக் கொள்வதற்காகவே தாம் இந்தப் பதிவுகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

வவுனியா,கிளிநொச்சி,முல்லைத்தீவு,மன்னார் ஆகிய மாவட்டங்களின் வேலையற்ற பட்டதாரிகளின் பதிவுகளும் அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகளூடாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

# மரண அறிவித்தல்



## கைலாயபிள்ளை சடாட்சரம் (காரைநகர்)

நடுத்தெரு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை சடாட்சரம் அவர்கள் (12.10.2018) வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை – பத்தினி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை – பரிமளம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், அமிர்தாம்பிகை, செல்வநாயகி, சிவகுமாரன், வடிவாம்பிகை, மகேஸ்வரன், சிவநாதன், நாகேஸ்வரி (கனடா), இரகுராமன், கிருபாகரன் (சுவிஸ்), சிற்சபேசன், செம்மனச் செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், தணிகாசலம் (வவுனியா), யோகேஸ்வரன் (Suba Gold House மட்டக்களப்பு), மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற தனபாலசுந்தரம் மற்றும் சறோஜினிதேவி, சிவகலை, செல்வராசா (கனடா), சுதர்சினி, கிருஷா, மீனாம்பிகை, விக்கினேஸ்வரன் ( HIGH MARKETING கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலசுப்பிரமணியத்தின் அருமைச் சகோதரரும், கனகம்மா, காலஞ்சென்ற செல்வநாயகம்பிள்ளை, சிவபாக்கியம் மற்றும் நடராசா, இராஜேஸ்வரி, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், கலாரூபன் – தயாளினி, சுகந்தன் – கோபிகா, சங்கீதா – ஜெயங்கரா, சுபாஜினி – பத்திக்குமரன், சுபாகரன் – ராங்கா, துவாகரன், கணாஜினி – வைகுந்தன், பவித்திரா, அமலன், மயூரன், மதுஷன், மயூரி, தர்சினி, சந்தோஷ், இமாஜனன், கிஷாரிகா, அரிகரசுதன், கேசவராம், அருணா, அர்ச்சனா, அஜந்தன், அஜித், அனோஜ், அரங்கன் ஆகியோரின் பேரனும் ஆருக்ஷன், ஹரிப்பிரதாப், சாருஷா, பாகவி, ஆரூரன், குந்தவி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (14.10.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**நடுத்தெரு,**
**காரைநகர்.**
**0775808734**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நாவாந்துறையில் நாளை கவனவீர்ப்பு

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 அளவில் நாவாந்துறை பிரதான சந்தைக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

வருடக்கணக்காக முறையான விசாரணையோ அல்லது விடுதலையோ இல்லாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களின் ஆரோக்கியமும் உயிர்களும் ஆபத்திற்கு உள்ளாக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் – ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களையும், மனிதநேயமுள்ள சமூகச் செயற்பாட்டாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ-07)


தேவை

பக்க வடிவமைப்பாளர்

காலைக்கதிர் பத்திரிகை நிறுவனத்துக்கு இரவு, பகல் கடமை புரியக்கூடிய பக்க வடிவமைப்பாளர்கள் தேவை.

☹ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
☹ கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை kalaikkathirnews@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.
தொலைபேசித் தொடர்புகளுக்கு – 0753153153.

காலைக்கதிர்
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.